# நினைவுத் தீபம்



அமரர்

# திருமதி மணி சிவசுப்பிரமணியம்

அவர்கள்

சிவபதம் எய்திய 31ஆம் நாள்

# நினைவு மலர்

05-05-2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுத்தீபம்



## அமரர்

# திருமதி மணி சிவசுப்பிரமணியம்

## அவர்கள்

சிவபதம் எய்திய


31ஆம் நாள்

# நினைவு மலர்

05-05-2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையல்



வாசம் குன்றா வாழ்வு தந்து
வழியெங்கும் ஒளி தந்து
தேசம் புகழும் நிலை தந்து
திரும்புமிடமெல்லாம் நினைவு தந்து
அழியாப் பிறப்பெடுக்கும் ஆவல் கொண்டு
ஆன்மா தாங்கிய சரீரம் நீங்கி
ஆண்டவன் நிழலில் அமரத்துவம் அடைந்த
எங்கள் பாசத்தாயின் பாதம் பற்றி
எம் கண்ணீரை பூக்களாக்கி
அர்ச்சனை செய்து
அஞ்சலி மலரை அவர் அடிகளில் தூவி
இந்நூலைப் படைக்கின்றோம்.

-பாசப்பிள்ளைகள்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# திருமதி மணி சிவசுப்பிரமணியம்

**தோற்றம்** அவர்கள் **மறைவு**

**25.10.1921** **03.04.2002**

அமரத்துவ திதி வெண்பா

சீர்நிறை சித்ரபானு ஆண்டு சிறக்கும் சித்திரையில்
பார்நேர் பூர்வபக்க துவிதிகையில்
சீராள் மணி சிவசுப்பிரமணியம் அம்மா சேர்ந்தாள் இறைபாதம்,
எம்முள் நினைவுகளில் நிறைந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப்பாடல்கள்



## விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணியின் கனிந்து.

திருவுங் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாக்கும் செய்கருமங் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கம் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர்தங் கை.

உள்ளமெனுங் கூடத்தில் ஊக்கமெனுந்
தறிநிறுவி உறுதியாகத்
தள்ளரிய அன்பென்னுந் தொடர்பூட்டி
இடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசு போதகக் கவளமிடக்
களுத்துண்டு கருணையென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்து வருவினைகள் தீர்ப்பாம்.

**யூரோ(Euro) நாணயம்**

♣ பதினொரு ஐரோப்பிய நாடுகள் ஒன்று சேர்ந்து தமக்கென உருவாக்கிய பொது நாணயமே யூரோ ஆகும். இது 1999 ஜனவரி 01 முதல் அமுலுக்கு வந்தது. ஆனால் 2002 ஜனவரியில் இருந்தே யூரோ நோட்டுக்களும் நாணயங்களும் புழக்கத்துக்கு வரவுள்ளன. இதன் பின் இந்நாடுகளுக்கென தனித்தனி நாணயம் இருக்க மாட்டாது.

♣ இங்கிலாந்து, டென்மார்க், சுவீடன் ஆகிய நாடுகள், யூரோ நாணயத்தை இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் 2002 இன் பின் இதனை ஏற்றுக் கொள்வதாக அறிவித்துள்ளனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரம்

### திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

தோடுடைய செவியன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட் பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே.

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உள்ளமே புகுந்தவதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளி சனி பாம்பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியானை அந்தணர்தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனைமற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப் பேசாத
நாளெல்லாம் பிறவா நாளே.

## உறுப்புக்களும் அவையுடன் தொடர்பு கொண்ட நோய்களும்

| உறுப்பு | நோய் |
| --- | --- |
| நுரையீரல் | தொழுநோய் |
| நரம்புகள் | தளர்வாதம் |
| நுரையீரல்கள் | நிமோனியா |
| தோல் | எக்ஸீமா |
| மண்ணீரல் | மலேரியா |
| பல் | பயோரியா |
| கண் | கட்ராக்ட் |
| தொண்டை | காயீட்டர் |
| குடல் | தைபோயிட் |
| கல்லீரல்மஞ்சட் | காமாலை |
| குடல்வால் | அப்பன்டிஸைட்டிஸ் |
| டான்ஸில்ஸ் | டான்ஸிலைட்டிஸ் |
| கணயச்சுரப்பி | டயபெற்றிக்ஸ் |
| முதுகெலும்பு, மூளை | மெயின்சிட்டிஸ் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநாவுக்கரசு நாயனார்

கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
கொடுமை பலசெய் தனநா னறியேன்
ஏற்றா யடிக்கே யிரவும் பகலும்
பிரியா துவணங் குவனெப் பொழுதும்
தோற்றா தென்வயிற் றினகம் படியே
குடரோ டுதுடக் கிடமுடக் கியிட
ஆற்றே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரணஞ்சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்டமில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே.

மாதர்ப் பிறைக்கண்ணி யானை
மலையான் மகளொடு பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடுப டாமல்
ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங்
களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங்
கண்டறி யாதன கண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ என்னிற்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே.

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
திருவாய் சிவகதி நீபா திரிப்புலி யூர் அரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தரமூர்த்தி நாயனார்

பித்தாபிறை சூடிபெரு மானே அருளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி அல்லேனெனல் ஆமே.

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினும்
சொல்லும் நாநமச்சி வாயவே.

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய்இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே.

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்த்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னுங்
கைதான் நெகிழ விடேன்உடை யாயென்னைக் கண்டுகொள்ளே.

கடையவ னேனைக் கருணையி னாற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாற்விறல் வேங்கையின் தோல்
உடையவ னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம்பி ரானென்னைத் தாங்கிக்கொள்ளே.

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையுங்
குற்றாலத் தர்மந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.

அன்றே என்தன் ஆவியும்
உடலும் உடைமையும் எல்லாமுங்
குன்றே யனையாய் என்னையாட்
கொண்டே போதே தொண்டிலையே
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
என்தோள் முக்கண எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

வேண்டத் தக்க தறிவோய்நீ
வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்தன் விருப்பன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மாலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

தாயினே ரிரங்குந் தலைவரோ என்றும்
தமியனேன் துணைவவோ என்றும்
நாயினே னிருந்து புலம்பினா லிரங்கி
நலம்புரி பரமர்தங் கோயில்
வாயினே ரரும்பு மணிமுருக் கலர
வளரிளஞ் சோலைமாந் தளிர்செந் தீயினே
ரரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவாளர் திருச்சிற்றம் பலமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி எம்மனம் புகுந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன்
முன்னம்மால் அறியா ஒருவனாம் இருவா
முக்கணாநாற்பெருந் தடந்தோட்
கன்னலே தேனே அமுதமே கங்கை
கொண்டசோ ளேச்சரத்தானே.

# திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை! வளர்கநம்
பக்தர்கள்! வஞ்சகர் போய்அகல
பொன்னின்செய் மண்டத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவு யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்தபொருள் அளவில்லாதோர்
ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற
தார்பெறு வார் உலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கம் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
வானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

— முற்றும் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்

சீதக களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியு மிலங்குபொன் முடியுந்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங்கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புத நின்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரு மூஹஷீக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாப்
பொருந்தவே வந்தெ னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யிதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணை யினிதெனக் கருளிக்
கருவிக ளோடுங்கும் கருத்தினை யறிவித்
திருவினை தன்னை யறுத்திரு கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயி லொருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை யடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைபிங் கலையி னெழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பி னாவி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையு மாதித்த னியக்கமுங்
குமுத சகாயன் குணத்ததையுங் கூறி
இடைச்சக் கரத்தி னீரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தி னுறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக வினிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கு மனமு மில்லா மனோலயந்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்
திருள்வெளி யிரண்டுக் கொன்றிட மென்ன
அருடரு மாநந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா வானந்த மளித்
அல்லல் களைந்தே யருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவா யப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமு நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாமுடன் கூட்டி
அஞ்சக் கரத்தி னரும்பொரு டன்னை
நெஞ்சக் கருத்தி னிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயகா விரைகழல் சரணே.

*திருச்சிற்றம்பலம்*

**முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயி பாடல்

இன்பம் எல்லாம் அருளும் அன்புத் தெய்வம் - உன்னை
எந்நாளும் மறவோம் ஐயா - வாழ்வில்
எந்நாளும் மறவோம் ஐயா.
துன்பம் எல்லாம் தீர தீய குணங்கள் வாட
தூய அருள் சேர துதிப்போர்க் கருளும் பாபா
(இன்ப)
புட்டபர்த்தி வாழும் கலியுக தெய்வம் நீ
உருகியே அழைக்கின்றோம் எழுந்தருளாய் இங்கே
எம்மனக் குறை தீர ஏற்றம் அருள்பவன் நீ
எண் திசையும் போற்றும் சாந்த சொரூபன் நீ
(இன்ப)

## அமுது மொழிகள்

பொன்னை உரசிப்பார்த்து அறியலாம். மனிதனை விவகாரம் நடத்தும் முறையிலிருந்து அறியலாம். எருமையை அது சுமக்கும் சுமையால் அறியலாம். பெண்களை அறிய எந்த முறையும் இல்லை.

- பஞ்ச தந்திரம்

நெஞ்சில் குற்றமுள்ளவனுக்கு ஒவ்வொரு கண்ணும் தன்னையே பார்ப்பது போல் தோன்றும்

-ஷேக்ஸ்பியர்.

மனநிறைவு கொண்ட மனிதன் எந்த நேரத்திலும் ஏழையாக இருப்பது இல்லை. மனநிறைவு இல்லாதவன் எப்போதும் பணக்காரனாக இருக்கமுடியாது.

- ஜார்ஜஎலியட்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE MIRACLE PRAYER

Lord Jesus, I come before You, just as I am
I am sorry for my sins, I repent of my sins,
please forgive me.
In your name I forgive all others for what
they have done against me.
I renounce satan, the evil spirits and
all their works.
I give you my entire self Lord Jesus
now and forever.
I invite you into my life Jesus,
I accept you as my Lord,
God and Saviour.
Heal me, change me, strengthen me
in body soul and spirit.
Come Lord Jesus, cover me with you
precious blood, and fill me with your
precious blood, and fill me with your
Holy Spirit.
I Love you Lord Jesus.
I praise you Jesus.
I thank you Jesus.
I shall follow you every day of my life.

**Amen!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அமரத்துவம் அடைந்த எங்கள் பாசத்தாய்
## திருமதி.மணி சிவசுப்பிரமணியம்
### அவர்களின்

# வாழ்க்கை பாதைவழி ஒரு நோக்கு...

இந்து சமுத்திரத்தின் முத்தாம் இலங்கையில் உள்ள கேகாலை மாவட்டத்தில் அம்பன்பிட்டிய என்ற இடத்தில் திரு.சிவசுப்பிரமணியம் எனும் பொற்புடையாளருக்கும், திருமதி.நாகரட்ணம் என்றும் சொல்நிறை அம்மையாருக்கும் ஆயிரத்து தொளாயிரத்து இருபத்தி ஓராம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இருபத்தி ஐந்தாம் திகதி வையம் தன்னில் பிறந்தார். அன்புயர் மணி எனும் சீர்நிறை நல்லாளுக்கு திருநாவுக்கரசு, விஜயபாஸ்கரம், தர்மபாலன் என்போர் உடன் பிறந்தவராவர்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை கேகாலையிலும், உயர்கல்வியை யா/வேம்படி மகளிர்கல்லூரியிலும் கற்றார். மனையியலில் மிகவும் தேர்ச்சி பெற்றார். தனது 23வது வயதில் மானிப்பாயைச் சேர்ந்த திரு.நவரட்ணம் அன்னம்மா தம்பதிகளின் மூத்தமகனான திருவாளர் சிவசுப்பிரமணயத்தை மணம் முடித்தார். இல்லற வாழ்வின் இனிய பயனாக ரஞ்சிதலோஜனி, பத்மலோஜனி, ரவீந்திரன் எனும் முத்தான மூன்று செல்வங்களை அவனியில் பெறும் பாக்கியத்தைப் பெற்றார். கணவர் தேயிலைத்தோட்ட நிர்வாக மேற்பார்வை யாளர் என்பதால் இவரின் வாழ்க்கையின் பெரும்பகுதி இலங்கை வளநாட்டின் மத்திய மலைப்பகுதியில் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டவளை, ஹட்டன் ஆகிய பகுதிகளில் தேயிலைத் தோட்டங்களின் மத்தியில் சிறப்புற வீடமைத்து சூழவுள்ள பகுதியெல்லாம் சோலையாக்கி அழகுற வாழ்ந்தார். அன்னாருக்கு சமையல் கைதேர்ந்தகலை. விருந்தோம்பல் அவரது சிறந்தபண்பு. மனம் கோணாமல் முகம் சுளியாது எத்தனை விருந்தினர்களையும் உபசரிப்பதில் அவருக்கு நிகர் அவரேதான். அவர் ஆற்றல் சொல்லில் அடங்காது.

அன்னார் மணி அவர்கள் பிரயாணம் செய்வதில் மிகவும் ஆர்வமுடையவர். இவர் லண்டன், அவுஸ்ரேலியா நாடுகட்குச் சென்று தனது பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் ஏறத்தாழ பத்து வருடங்களுக்கு மேல் வாழ்ந்து, கனடா, நெதர்லாந்து, நோர்வே போன்ற நாடுகளுக்குச் சென்று தனது உறவினருடன் இன்புற்று வெகு அண்மையில் ஈழவளநாட்டிற்குத் திரும்பினார். காலன் இவரை இறுதி யாத்திரையின் பொருட்டுத்தான் ஈழம் அழைத்து வந்தானோ என எங்கள் மனம் துடிக்கின்றது. இவர் தனக்கென ஒரு நண்பர் குழாமையே பிறநாடுகளில் கொண்டிருந்தார். மும்மொழிகளிலும் மிகவும் தேர்ச்சி பெற்றவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

எத்தனை சுற்றம் இருந்தும் என்ன பயன்! இறைவன் விதித்த விதியின் பயனாய் இன்மகள் இத்தரை விடுத்தே அகன்றார். இதுதான் விதியின் தேற்றம் எனக்கொள்வோம். எல்லாம் அவன் செயல். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிரார்த்திப்போம்.

ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் மம்மி

காலக் கொடுமையிலே
மம்மி, நின் மணியான
மலர் முகம் தொலைத்தோம் ......

அழகிய நின் அன்பு மன
ஆறுதலைத் தான் இழந்தோம்.

பகலினும் இருளாய், அர்த்தங்கள் அழியும்
துயரில் துடிக்கின்றோம் ......
மம்மி ...... மம்மி....... மம்மி......
எங்கள் இதய ஒலி
கேட்கவே இல்லையா .........

அழுவதை அறியாத நின் வளர்ப்பு
அப்பாவை
இளமையில் தொலைத்த பின்பும்
அயராத எம் வாழ்க்கை

அறிவுத்துணிவும் ஆற்றலும் விளங்கும்
ஆளுமைக் கனவை எம்மிடை மூட்டினாய்.......
அன்பால் இந்த உலகையே ஆளும்
உறவின் ரகசிய உண்மைகள் ஊட்டினாய்.......

தேசம் முழுவதும் விரிந்த நின் உறவுகள்
சேதி அறிந்து தவித்தல் அறியாயா..........
நேசக் குழந்தைகள் எங்களை விட்டுமே
நீளவே போனதேன் மம்மி..........

ஆறுதல் சொல்லவும்
இனி
யாரிங்கு மம்மி.............
மம்மி...... மம்மி...... சாந்தி பெறுக
எங்களுக்கும் சாந்தி தருக.

நினைவுடன் வாழும்
பாசப்பிள்ளைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அம்மம்மா

அம்மம்மா என்ற நிலையை மறந்து
அன்னையைப் போலல்லவா வளர்த்தீர்கள்
எங்குமே நாம் கண்டிராத அன்பையும்பாசத்தையும்
நீங்கள் தானே தந்தீர்கள்
உங்கள் பிள்ளைபோல் வளர்த்து
கண்ணுங் கருத்துமாய் காத்தெம்மை
சடுதியாய் விட்டகன்று
எம்மை ஆறாத்துயரில்
ஆழ்த்தி விட்டீர்களே அம்மம்மா!!

என்றும் மறவாத
பேரப்பிள்ளைகள்.

இருளில் பயப்படும் குழந்தையை விட வெளிச்சத்தில் பயப்படும் மனிதன் மோசமானவன்.

- எமர்சன்

அமைதியாக இருந்தால் எவரையும் வசப்படுத்திவிட முடியும்.

- செயின்ட் ஜஸ்ட்

உலகை அறிந்தவன் வெட்கப்படமாட்டான். தன்னை அறிந்தவன் அகம் பாவமடையமாட்டான்

- விம்மன்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துன்பம் நேர்கையில்.......

துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ
இன்பம் சேர்க்க மாட்டாயா?
துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ
இன்பம் சேர்க்க மாட்டாயா?
எமக்கு இன்பம் சேர்க்க மாட்டாயா?
எமக்கு இன்பம் சேர்க்க மாட்டாயா?

அன்பிலா நெஞ்சில் தமிழில் பாடி நல்
அன்பிலா நெஞ்சில் தமிழில் பாடி நீ
அல்லல் நீக்க மாட்டாயா?
நல் அன்பிலா நெஞ்சில் தமிழில் பாடி
நல் அன்பிலா நெஞ்சில் தமிழில் பாடி நீ
அல்லல் நீக்க மாட்டாயா?
கண்ணே அல்லல் நீக்க மாட்டாயா?

துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ
இன்பம் சேர்க்க மாட்டாயா?
எமக்கு இன்பம் நேர்க்க மாட்டாயா?
வன்பும் எழிமையும் சூழும் நாட்டிலே
வன்பும் எழிமையும் சூழும் நாட்டிலே
வன்பும் எழிமையும் சூழும் நாட்டிலே
வாழ்வில் உணர்வு சேர்க்க
எம் வாழ்வில் உணர்வு சேர்க்க
நீ அன்றை நற்றமிழ் கூத்தின் முறையினால்
ஆடிக்காட்ட மாட்டாயா?
கண்ணே ஆடிக்காட்ட மாட்டாயா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ
இன்பம் சேர்க்க மாட்டாயா?
எமக்கு இன்பம் சேர்க்க மாட்டாயா?
அறமிதென்றும் யாம் மறமிதென்றுமே
அறமிதென்றும் யாம் மறமிதென்றுமே
அருகிலாத போது -
யாம் அருகிலாதபோது - தமிழ்
இறைவனாரின் திருக்குறளிலே ஒரு சொல்
இறைவனாரின் திருக்குறளிலே ஒரு சொல்
இயம்பிக்காட்ட மாட்டாயா - நீ?
இயம்பிக்காட்ட மாட்டாயா.?

துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ
இன்பம் சேர்க்க மாட்டாயா?
எமக்கு இன்பம் சேர்க்க மாட்டாயா?
புறமிதென்றும் நல் அகமி தென்றுமே
புறமிதென்றும் நல் அகமி தென்றுமே
புலவர் கண்ட நூலின்
தமிழ் புலவர் கண்ட நூலின் - நல்
திறமை காட்டி உனை ஈன்ற எம்
உயிர் செல்வமாக மாட்டாயா? - தமிழ்
செல்வமாக மாட்டாயா? - தமிழ்
செல்வமாக மாட்டாயா.?
துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ
இன்பம் சேர்க்க மாட்டாயா?
எமக்கு இன்பம் சேர்க்க மாட்டாயா?
எமக்கு இன்பம் சேர்க்க மாட்டாயா?
எமக்கு இன்பம் சேர்க்க மாட்டாயா.?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்து கொள்ள வேண்டியவை

| | |
|---|---|
| உருகும் உள்ளத்தில் உதிப்பது | - அன்பு |
| இறுகும் உள்ளத்தில் எழுவது | - அகந்தை |
| அன்பு விளைவிப்பது | - ஒற்றுமை |
| அகந்தை விளைவிப்பது | - வேற்றுமை |
| வேற்றுமையால் விளைவது | - துன்பம் |
| வருவதும் போவதும் இரண்டு | - இன்பம், துன்பம் |
| வந்தால் போகாதவை இரண்டு | - புகழ், பழி |
| போனால் வராதவை இரண்டு | - மானம், உயிர் |
| தானாக வருவது இரண்டு | - இளமை, மூப்பு |
| நம்முடன் வருவது இரண்டு | - பாவம்,புண்ணியம் |
| அடக்கமுடியாதது இரண்டு | - ஆசை, துக்கம் |
| தவிர்க்க முடியாதது இரண்டு | - பசி, தாகம் |
| நம்மால் பிரிக்கமுடியாதது இரண்டு | - பந்தம், பாசம் |
| அழிவைத்தருவது இரண்டு | - பொறாமை,கோபம் |
| எல்லோர்க்கும் சமனானது இரண்டு | - பிறப்பு, இறப்பு |
| அறிவித்தால் அறியும் பொருள் | - பசு |
| அறிவித்தாலும் அறியமாட்டாத பொருள் | - பாசம் |

மேன்மையை நாடிச் செல்பவனுக்கு, சிறுகுறைகள் உறுத்தாது.

- யொஷேன் லேவேட்டா

ஒருவனுடைய மனம் தூய்மையாக இல்லாவிட்டால் பணமோ, வலிமையோ, அழகோ அவனுக்குப் பயன்படமாட்டாது.

-அரிஸ்டோட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்சுடர்

இவ்வுலகம் கோழைகளுக்கல்ல ஓடமுயலாதே.
வெற்றியையோ தோல்வியையோ எதிர்பார்க்காதே.

யாருடைய நம்பிக்கையையும் குலைக்க முயலாதே.
இயலுமானால் அவனுக்கு அதைவிட மேலான ஒன்றைக் கொடு.

நீ எதையும் எல்லாவற்றையும் சாதிக்க கூடியவன்
எல்லாம் வல்லவன் நீ.

இன்பம் மனிதன் முன் தோன்றும் போது
தனது தலை மீது துன்ப முடியைச் சூடி வருகின்றது.

பிறரிடம் உள்ள தீய தன்மைகளை எண்ண வேண்டாம்
அது அறிவின்மையும் தளர்ச்சியும் ஆகும்.

செல்வந்தர்களை வழிபடத் தொடங்கும் நாள் முதலே
ஒரு சமயத்தின் கேடு ஆரம்பிக்கின்றது.

நான் எதையும் சாதிக்க வல்லவன் என்று சொல்.
நீ உறுதியுடன் இருந்தால் பாம்பின் விஷம் கூடச்
சத்தியற்றதாகிவிடும்.

தமக்கு வேண்டிய ஒரே பொருள் பலமே.
உலகத்தின் நோய்க்கு மருந்தும் பலமே.
பணக்காரர்களின் கொடுமைக்கு உட்படும்போது
ஏழைகளுக்கு கட்டாயம் வேண்டிய மருந்தும் பலமே.

எழுந்து நில்லுங்கள், தைரியமாயிருங்கள்.
பலமுடையவர்களாகுங்கள் உங்கள்விதியை படைத்தது நீங்களே
என்பதை அறியுங்கள்.

- சுவாமி விவேகானந்தர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சிலுவைச் சங்கம்

போரில் காயமடையும் வீரர்களுக்கு உதவி செய்யும் நிறுவனம் செஞ்சிலுவைச் சங்கமாகும். இது ஒரு சர்வதேச அமைப்பு நிறுவனமாகும். இதன் தலைமைச் செயலகம்சுவிட்சர்லாந்து நாட்டில் ஜெனீவா நகரில் உள்ளது. உலகெங்கும் இதன் கிளைகள் உள்ளன. இதன் கொடியில்வெள்ளைப் பின்னணியில் சிவப்பு நிறச் சிலுவை பொறிக்கப்பட்டிருப்பதால் செஞ்சிலுவைச் சங்கம் என அழைக்கப்படுகின்றது. முஸ்லிம் நாடுகள் சிலவற்றில் சிலுவைக்குப் பதிலாக பிறை சித்திரிக்கப்பட்டுள்ளது. இந்த நாடுகளில் இவை செவ்விளம்பிறைச்ச ங்கம் (Red Crescent Society) என்ற பெயரில் இயங்குகின்றன.

போரில் காயமடைந்த வீரர்களுக்கு அவர்களின் நாடு, இனம், மொழி முதலிய வேறுபாடுகளைப் பார்க்காது இச்சங்கம் மருத்துவ உதவி அளிக்கின்றது. இவை தவிர போரில் கைதிகளாகப் பிடிபட்ட வீரர்களின் நலனையும் இது பாதுகாக்கிறது. போர் ஏதும் நடக்காத காலத்தில் இது பொது மக்களின் சுகாதாரத்தைக் கவனித்து மருத்துவ வசதிகளை அளிக்கிறது. புயல், வெள்ளம், பூகம்பம் நிகழும் போது இது மக்களுக்கு பேருதவி செய்கிறது.

சிறந்த நல் நோக்கங்களைக் கொண்டுள்ள இச்சங்கம் 1864ல் தோன்றியது. செஞ்சிலுவைச் சங்கம் தோன்றக் காரணமாக இருந்தவர் சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஹென்றி டுனான்ட் (Henry Dunant) ஆவார். 1859ல் பிரான்சிற்கும், ஆஸ்திரியாவிற்குமிடையே நடந்த போரில் மருத்துவ உதவியின்றி மடிந்த வீரர்களின் நிலையைக் கண்டு இவர் கண் கலங்கினார். துணைக்கு சிலரை அழைத்துச் சென்று சாகும்நிலையிலிருந்த பல வீரர்களுக்கு மருந்து கொடுத்துக் காப்பாற்றினார். இந்நிகழ்ச்சியை விபரித்து இவர் எழுதிய நூல் செஞ்சிலுவைச் சங்கத்தின் தோற்றத்திற்கு வித்தானது.

இதன்பின் ஹென்றி டுனான்ட் பல நாடுகளுக்குச் சென்று இச்சங்கத்தை ஆரம்பித்தார். இதன் பயனாக இன்று எல்லா நாடுகளிலும் செஞ்சிலுவைச் சங்கம் வேரோடியுள்ளது. உதாரணமாக இந்தியாவில் 1920ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இன்று இலங்கையிலும் இவ்வமைப்பு தோன்றி இப்போர்க்கால சூழ்நிலையிலும் பல உதவிகள் மக்களுக்கு புரிந்து நல்ல இடத்தைப் பெற்று வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக தினங்கள்

| | | |
|---|---|---|
| ஜனவரி | 26 | உலக சுங்கத்துறை நாள் |
| பிப்ரவரி | 25 | உலக காச நோய் தடுப்பு தினம் |
| மார்ச் | 08 | உலக மகளிர் தினம் |
| மார்ச் | 15 | உலக ஊனமுற்றோர் தினம் |
| மார்ச் | 21 | உலக வன தினம்—உலக இன—பேத ஒழிப்பு நாள் |
| மார்ச் | 22 | உலக நீர் நாள் |
| மார்ச் | 23 | உலக வானிலை நாள் |
| ஏப்ரல் | 18 | உலக மரபுரிமை தினம் |
| ஏப்ரல் | 22 | புவி நாள் |
| மே | 01 | உலகத் தொழிலாளர் தினம் |
| மே | 03 | பத்திரிகை சுதந்திர நாள் |
| மே | 2வது ஞாயிற்றுக்கிழமை | உலகத் தாய்மார் தினம் |
| மே | 08 | உலகச் செஞ்சிலுவை தினம் |
| மே | 15 | உலகக் குடும்ப நாள் |
| மே | 17 | உலகத் தொலைத்தொடர்பு தினம் |
| மே | 24 | காமன்வெல்த் திட்டம் |
| மே | 31 | புகையிலை எதிர்ப்பு நாள் |
| ஜூன் | 04 | தாக்குதலுக்கு பலியான உலகப்பச்சிளஞ்சிறார் தினம் |
| ஜூன் | 05 | உலகச் சுற்றுச் சூழல் தினம் |
| ஜூன் | 26 | உலக போதை பொருள் தடுப்பு நாள் |
| ஜூன் | 27 | உலக நீரிழிவு தினம் |
| ஜூலை | 06 | விலங்குகளிலிருந்து மனிதனுக்குப் பரக்கூடிய நோய்கள் தினம் |
| ஜூலை | 11 | உலக மக்கள் தொகை நாள் |
| ஆகஸ்டு | 03 | உலக நட்பு தினம் |
| ஆகஸ்டு | 06 | ஹிரோஷிமா தினம் |
| செப்டம்பர் | 08 | உலக இலக்கிய தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| செப்டம்பர் | 16 | உலக ஓஸோன் தினம், உலக அமைதி தினம் |
| செப்டம்பர் | 26 | உலகக் காதுகேளார் தினம் |
| செப்டம்பர் | 27 | உலகச் சுற்றுலா தினம் |
| அக்டோபர் | 01 | உலக முதியோர் தினம் |
| அக்டோபர் | 03 | உலகக் குடியிருப்பு நாள் |
| அக்டோபர் | 04 | உலக விலங்கு நல தினம் |
| அக்டோபர் | 10 | உலக அஞ்சலக நாள் |
| அக்டோபர் | 13 | உலக இயற்கை அழிவுக் குறைப்பு நாள் |
| அக்டோபர் | 14 | உலகத் தர நிர்ணய நாள் |
| அக்டோபர் | 15 | உலக வெண்கைத்தடி தினம்— கண்ணிழந்தோர் வழிகாட்டு தினம் |
| அக்டோபர் | 16 | உலக உணவு நாள் |
| அக்டோபர் | 24 | உலகச் சிக்கன நாள் மற்றும் ஐ.நா.தினம் |
| அக்டோபர் | 30 | உலக வளர்ச்சித் தகவல் தினம் |
| நவம்பர் | 29 | உலக பாலஸ்தீனியர் ஒற்றுமை தினம் |
| டிசம்பர் | 01 | உலக எய்ட்ஸ் ஒழிப்பு நாள் |
| டிசம்பர் | 10 | உலக மனித உரிமைகள் நாள். |

ஒரு தீயவனை வென்றுகாட்ட இன்னொரு தீயவன் எப்போதும் உண்டு

-ஒரு மகான்

தேவைக்கப் போதுமான செல்வம் உன்னைச் சுமக்கும் தேவைக்கு அதிகமான செல்வம் உனக்குச் சுமையாகும்.

- ஓர் அறிஞர்

பெரிய மலைகளைக் கூடப் புரட்டி விடலாம். மனதை அடக்குவதுதான் கடினம்.

- அறநெறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கியமான இடங்களும் இருப்பிடங்களும்

| | |
|---|---|
| அஜந்தா குகைகள் | - ஔரங்காபாத் |
| அக்பர் சமாதி | - சிகந்தராபாத் |
| அமர்நாத் குகை | - காஷ்மீர் |
| அம்பர் அரண்மனை | - ஜெய்ப்பூர் |
| ஆனந்தபவன் | - அலகாபாத் |
| பக்ரா நங்கல் அணைக்கட்டு | - பஞ்சாப் |
| பிர்லா கோளரங்கம் | - கல்கத்தா |
| பிரகதீஸ்வரர் ஆலயம் | - தஞ்சாவூர் |
| பிருந்தாவன் தோட்டம் | - மைசூர் (கர்நாடகம்) |
| சென்ன கேசவனோயில் | - பெல்லூர் |
| சார்மினார் | - ஹைதராபாத் |
| யானைக் குகைகள் | - மும்பாய் |
| தங்கக்கோயில் | - அமிர்சரஸ் |
| தொங்கு தோட்டம் | - மும்பாய் |
| ஜெகநாதர் கோயில் | - பூரி |
| ஜும்மா மசூதி | - டில்லி |
| கைலாச கோயில் | - எல்லோரா |
| டால் ஏரி | - ஸ்ரீநகர் |
| லால்பாக் | - பெங்களூர் |
| விவேகானந்தர் பாறை | - கன்னியாக்குமரி |
| கோனார்க் சூரியக்கடவுள் கோயில் | - பூரி |
| மகா காளீஸ்வரர் கோயில் | - உஜ்ஜயினி |
| மெரினா கடற்கரை | - சென்னை |
| மீனாட்சியம்மன் கோயில் | - மதுரை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| பத்மநாபா கோயில் | - திருவனந்தபுரம் |
| பிக்பென் | - லண்டன் |
| பிரேண்டன்பர்க் வாயில் | - பெர்லின் |
| பிராட்வே | - நியூயார்க் |
| பக்கிங்காம் அரண்மனை | - லண்டன் |
| செனடோப் | - லண்டன் |
| கோலோசியம் | - ரோம் |
| ஈஃபில் கோபுரம் | - பாரிஸ் |
| பளிட் தெரு | - லண்டன் |
| ஹார்லி தெரு | - லண்டன் |
| ஹைட் பூங்கா | - லண்டன் |
| இந்திய வீடு | - லண்டன் |
| காபா | - மெக்கா |
| கிரெம்ளின் | - மாஸ்கோ |
| சாய்வுகோபுரம் | - பைசா |
| ஈகில் டவர் | - பாரிஸ் |
| மெர்டேகா அரண்மனை | - ஜகார்த்தா |
| ஓவல் | - லண்டன் |

உலகில் வெற்றிபெற வேண்டுமானால் ஏற்கனவே வெற்றி பெற்றுவிட்ட மாதிரி நீங்கள் தோற்றம் தரவேண்டும்.

- நெப்போலியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாடும் இடங்கள் அளவுகள்

| | |
|---|---|
| பூப்பந்தாட்டம் | : இரட்டையர் -நீளம் 44அடி, அகலம் 20 அடி ஒற்றையர் - 44 அடி, அகலம் 17 அடி |
| பேஸ்பால் | : ஒவ்வொரு பக்கமும் 90 அடியும், 126 அடி மூலைவிட்டமும் கொண்ட சாய்சதுர வடிவ அரங்கம். |
| பில்லியார்ட்ஸ் | : மேசை-நீளம் 10 அடி, அகலம் 5 அடி, உயரம் 3 அடி. |
| குத்துச்சண்டை | : மேடை-20 அடி நீளம், 12 அடி அகலம். |
| கூடைப்பந்து | : 85அடி நீளம், 46 அடி அகலம். |
| கிரிக்கெட் மைதானம் | : கிரிக்கெட் மைதானம் விக்கெட் 22மேல் பந்து சுற்றளவு 8 $^{13}/_{16}$ அங்குலத்திலிருந்து 9 அங்குலம் வரை எடை $5^{1}/_{2}$ அவுன்ஸிலிருந்து 5 $^{3}/_{4}$ அவுன்ஸ் வரை பந்தடிக்கும் மட்டை 38 அங்குல உயரமும் 4.5 அங்குல அகலமும், இருக்க வேண்டும். விக்கெட்டிலிருந்து 4 அடி முன் நிற்க வேண்டும். |
| டர்பி பந்தையம் | : 1 $^{1}/_{2}$ மைல் முதல் 2 $^{1}/_{2}$ மைல் வரை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| கால்பந்தாட்ட மைதானம் | : நீளம் 100 முதல் 130 கெஜம், அகலம் 50 முதல் 55 கெஜம்வரை கோல் 8 கெஜம் அகலம் கோல் கம்பியின் உயரம் தரையிலிருந்து 8 அடி, பரப்பளவு 6 கெஜமும் இருக்க வேண்டும். பந்தின் சுற்றளவு 27 முதல் 28 அங்குலம் வரை கால அளவு அதிகமாக 90 நிமிடங்கள். |
| கோல்.ீ.ப் | : பந்து விழும் துறை $4^1/_2$ ஆழம் $1^1/_2$ அவுன்ஸ் எடை |
| ஹாக்கி | : விளையாட்டிடம் நீளம் 100, அகலம் 55முதல் 60 கெஜம் கம்பம் 4 கெஜ உயரம், செங்குறுக்குக் கம்பிகள் 6 அடி உயரம், காலம் - 30 நிமிடங்கள் கொண்டு இரண்டு முறை பந்து - சுற்றளவு அங்குலம் எடை $5^1/_2$ அவுன்ஸ். |
| மரதன் ரேஸ் | : 26 மைல் 385 கெஜம் |
| போலோ | : மைதானம் 300க்கு 200 கெஜம் |
| மேஜை டென்னிஸ் | : மேஜையின் நீளம் 9அடி அகலம், மேற்பரப்பு. |
| டென்னிஸ் மைதானம் | : இருவா 78 அடி நீளம், 36 அடி அகலம், ஒருவர் 78 அடி நீளம், 28 அடி அகலம். |
| கைப்பந்தாட்டம் | : நீளம் 30 அடி, அகலம் 10 அடி. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டுபிடிப்புக்கள்

| கண்டுபிடித்தவை | கண்டுபிடித்தவர் | ஆண்டு | நாடு |
|---|---|---|---|
| அச்சு (உருட்டல்) | ரிச்சாட்டு ஹோ | 1846 | அமெரிக்கா |
| அச்சுக்கூடம் | ஜோஹன் கூடன்பர்க் | 1455 | ஜெர்மனி |
| ஆகாயவிமானம் | ஆர்வில் மற்றும் வில்பட்சகோதரர்கள் | 1903 | அமெரிக்கா |
| இசைத்தட்டு | டாக்டர் பீட்டர் கோல்ட் | 1948 | அமெரிக்கா |
| இயந்திரத்துப்பாக்கி | ஜேம்ஸ்பாக்கில் | 1718 | பிரிட்டன் |
| இரட்டைக் குவிவுவில்லை | பெஞ்சமின்பிராங்களின் | 1780 | அமெரிக்கா |
| ஊக்கு | வால்டர் ஹண்ட் | 1849 | அமெரிக்கா |
| எஃகு உற்பத்தி | ஹென்றி பெஸீமர் | 1855 | பிரிட்டன் |
| எஃகு (துருப்பிடிக்காதது) | ஹாரிபிரியர்லி | 1913 | பிரிட்டன் |
| எக்ஸ் கதிர் எழுதுதல் | வில்ஹெலம் கே.ராண்ட்ஜங்ன | 1895 | ஜெர்மனி |
| ஒலிப்பெருக்கி(LoudSpeaker) | ஹாரஸ் ஷார்ட் | 1900 | பிரிட்டன் |
| கப்பல் (கடல் வழி) | கிரேக்கர்கள் கி.மு | 1250 | |
| கப்பல்கள் (சுழலி) | மேதகு சர்.சி.பார்ஸஸ் | 1894 | பிரிட்டன் |
| நீராவி | ஜே.சி.பெரியர் | 1775 | பிரான்ஸ் |
| ஸகடிகாரம் (இயந்திரவியல்) | ஐ.ஹசிங் மற்றும் லியாங்லிங்ட்சான் | 1725 | கிரேக்கம் |
| ஊசிலி | கிறிஸ்டியன் ஹியுஜென்ஸ் | 1656 | நெதர்லாந்து |
| கடிகாரம் | பார்த்தோமியு மான்மீப்பி | 1462 | இத்தாலி |
| கண்ணாடி(கறை உள்ளது) | ஆக்ஸ்பர்க் | 1080 | ஜெர்மனி |
| கண்ணாடி பண்டங்கள் | எகிப்து மற்றும் மெஸ்படோமியா கி.மு | 1500 | |
| காகிதம் | சீனர் | 105 | சீனா |
| கார்(நீராவி) | நிக்கோலஸ்குனாட் | 1769 | அமெரிக்கா |
| (பெட்ரோல்) | கார்ல் பென்ஸ் | 1769 | பிரான்சு |
| கார்ப்புரேட்டர் | காப்லியெப்டெயில்மர் | 1876 | ஜேர்மனி |
| காலஅளவி (குரோனோமீட்டர்) | ஜான்ஹாரிஸன் | 1735 | பிரிட்டன் |
| கால்வனோமீட்டர் | ஆன்ட்ரி மேரிஆம்பியர் | 1834 | பிரான்சு |
| கப்பல் (உறுதியற்றது) | ஹென்றி கிஃப்பார்டு | 1852 | பிரான்சு |
| கப்பல் (உறுதியானது) | ஜி.எப்.வான்செப்பனின் | 1900 | ஜெர்மனி |
| கிராமபோன் இசைத்தட்டு | தாமஸ் ஆல்வா எடிசன் | 1878 | அமெரிக்கா |
| குமிழ் திசைகாட்டி | எல்மர் ஏ ஸ்பெர்ரி | 1911 | அமெரிக்கா |
| குளிர்சாதனப்பெட்டி | ஜேம்ஸ் ஹாரிஸன்மற்றும் அலெக்சாண்டர் காட்லின் | 1850 | அமெரிக்கா |
| கூட்டல் இயந்திரம் | வில்ஹெலம் ஷிக்காடு | 1623 | ஜெர்மனி |
| சக்கரம் | சுமேரியர்கள் சுமார் கி.மு | 3300 | |
| சலவை இயந்திரம் | ஹார்லிமெஷின் கம்பெனி | 1907 | அமெரிக்கா |
| சலவைத் தொழில் | ஜே.எஃப் காண்ட்ரெல் | 1934 | அமெரிக்கா |
| சறுக்கு அளவுகோல் | வில்லியம் ஊத்ரெட் | 1621 | பிரிட்டன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| சிப் அடைப்பான்(Zip) | W.L.ஜட்சன் | 1891 | அமெரிக்கா |
| சிமிண்ட்(போட்லாந்து) | ஜோசப் ஆஸ்ப்தின் | 1824 | பிரிட்டன் |
| செல்லுலாய்டு | அலெக்ஸாண்டர் பாக்கிஸ | 1861 | பிரிட்டன் |
| செல்லோ.்.பேன் | டாக்டர் ஜே.பிராண்டன் பெர்கர் | 1908 | சுவிட்சர்லாந்து |
| சைக்கிள் (இரண்டுசக்கரம்) | கிரிக்பாட்ரிக் மாக்மில்லன் | 1839-40 | பிரிட்டன் |
| சைக்கிள் டயர்கள(காற்றுநிறைந்தது) | ஜான்பாய்டு டன்லப் | 1888 | பிரிட்டன் |
| டிரான்சிஸ்டர் | பார்டீன், ஷாக்லீ மற்றும் பிராப்டைன் | 1948 | அமெரிக்கா |
| டீசல் இயந்திரம் | ருடால்ப் டீசல் | 1895 | ஜெர்மனி |
| டெரிலின் செயற்கை இழை | ஜே.ஆர்.வின்.்.பீல்டு ஜே.டி.டிக்சன் | 1941 | பிரிட்டன் |
| டைனமோ | ஹைப்போலைட்பிக்சை | 1832 | பிரான்சு |
| தட்டச்சுப் பொறி | பெல்லிகிரின் டாரி | 1803 | இத்தாலி |
| தட்டுத்தடை ஓட்டி (DisKbrake) | டாக்டர் எ.்.ப் லாஞ்செஸ்டர் | 1902 | பிரிட்டன் |
| தந்தி | எம்.லாமமோண்ட் | 1787 | பிரான்சு |
| தந்திக் குறியீடு | சாமுவேல் எ.்.பெப் மோர்ஸ் | 1837 | அமெரிக்கா |
| தானியங்கி(Locamotive) | ரிச்சர்ட் திரவித்திக் | 1804 | பிரிட்டன் |
| தான் துவக்கி(Self0starter) | சார்லஸ் எ.்.ப் கெட்டரிங் | 1911 | அமெரிக்கா |
| திருடர் அபாய ஒலி எழுப்பி | எட்வின் டீ ஹோல்ம்ஸ | 1858 | அமெரிக்கா |
| திரைப்படம் | நிக்கோலஸ் மற்றும் ஜூன் லூமியர் | 1895 | பிரான்ஸ் |
| தீப்பெட்டி | ஜான்வாக்கர் | 1828 | பிரிட்டன் |
| தொலைக்காட்சி(எந்திரவியல்) | ஜான் லாக்கி பெயர்ட் | 1926 | அமெரிக்கா |
| தொலைக்காட்சி | பி.டி.பார்ன்ஸ்வொர்த் | 1927 | அமெரிக்கா |
| தொலைபேசி(ஆரம்பநிலை) | அன்டோனியோ மியூசிக் | 1849 | இத்தாலி |
| தொலைபேசி | அலெக்ஸாண்டர்ஹாம்பெல் | 1876 | அமெரிக்கா |
| தையல் இயந்திரம் | பார்த்தலெமி திம்மோனியர் | 1829 | அமெரிக்கா |
| நியான் விளக்கு | ஜார்ஜ் கிளாட் | 1910 | பிரான்சு |
| நீராவிப் பொறி | தாமஸ் சவேரி | 1698 | பிரிட்டன் |
| நீராவிப் பொறி(குளிர்விப்பான்) | ஜேம்ஸ் வாட் | 1765 | பிரிட்டன் |
| நீராவிப் பொறி(பிஸ்டன்) | தாம்ஸ் நியுகாமென் | 1712 | பிரிட்டன் |
| நீர்க்கழித்தொட்டி | ஜே.ஹாரிங்டன் வடிவமைத்தது | 1589 | பிரிட்டன் |
| நீர்மூழ்கிக் கப்பல் | டேவிட் புஷ்னல் | 1776 | அமெரிக்கா |
| நீர்த்தேக்கத் தொட்டி | சர் ஏர்னஸ்ட் ஸ்விங்டன் | 1914 | பிரிட்டன் |
| நுண் கணிப்பி (Microprocessor) | ராபர்ட் நாய்ஸ் மற்றும் கார்டன்மூர் | 1971 | அமெரிக்கா |
| நுண்காட்டி (Microscope) | இஸட்ஜான்சென் | 1590 | நெதர்லாந்து |
| நுண்ணொலிவாங்கி (Microphone) | அலெக்ஸாண்டர் கிரஹாம்பெல் | 1876 | அமெரிக்கா |
| நூற்பாலை .்.பிரேம் | சர்.ரிச்சார்டு ஆக்ரைட் | 1769 | பிரிட்டன் |
| நைலான் | டாக்டர்.வாலஸ்எச் கரோத்தர்ஸ் | 1937 | அமெரிக்கா |
| படச்சுருள் (அசையும் புறக்கோடுகள்) | லூயி பிரின்ஸ் | 1885 | பிரான்ஸ் |
| படச்சுருள் (இசையொலி) | டாக்டர் லீ.டி.்.பாரஸ்ட் | 1923 | அமெரிக்கா |
| படச்சுருள் (பேசும்) | ஜே.இங்கள், ஜே.முசோலி | 1922 | ஜெர்மனி |
| பலூன் | வாக்ட் ஜேக்விஸ் ஜோசப் மாண்ட் கோல்பியா | 1783 | பிரான்சு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| பல் எனாமல் பூச்சு | அந்தோனி ஏ.பிளான்சன் | 1817 | அமெரிக்கா |
| பல் எனாமல் பூச்சு (ரப்பர்) | சார்லஸ் குட்இயர் | 1855 | அமெரிக்கா |
| பறக்கும் குடை (Praachute) | ஏ.ஜே.கார்னெர் | 1797 | பிரான்சு |
| பற்றவைப்பான்(Electric welder) | எவாஞ்சலிஸ்டா டாலிசெல்லி | 1644 | இத்தாலி |
| பால் பதனப்படுத்துதல் | லூயிஸ் பாஸ்டர் | 1867 | பிரான்சு |
| பீங்கான் | | 815 | சீனா,சிறிய ஆசியா |
| புகைப்படம்(உலோகத்தின்மேல்) | ஜே.என்.நிப்சி | 1826 | பிரான்சு |
| புகைப்படம்(காகிதத்தின்மேல்) | டபிள்யூ.எச்.பாக்ஸ்டல் போட | 1835 | பிரிட்டன் |
| புகைப்படம்(படச்சுருளின்மேல்) | ஜான் கார்பட் | 1888 | அமெரிக்கா |
| புன்சென் விளக்கு | ஆர்.வில்ஹெல்ம்வான் புன்சென | 1855 | ஜேர்மனி |
| பேக்லைட்(Bakelite) | லியோ எச்.பேக்லாண்ட் | 1907 | பெல்ஜியம் |
| பேனா (Pen) | லூயிஸ் இ.வாட்டர்மென | 1884 | அமெரிக்கா |
| மின்தள அடுக்கு(Electricbattery) | அலிஸ்சாண்டரோ வோல்டா | 1800 | இத்தாலி |
| மின்காந்தம் | வில்லியம் டார்ஜின் | 1824 | பிரிட்டன் |
| மின்சார தேய்ப்புப்பெட்டி | எச்.டபிள்யூ சீலி | 1882 | அமெரிக்கா |
| மின்பொறி(நேர்மின்னோட்டம்) | செனோபிகிராம் | 1873 | பெல்ஜியம் |
| மின்பொறி(மாறுமின்னோட்டம்) | நிக்கோலா டெஸ்லா | 1888 | அமெரிக்கா |
| மின்மாற்றி(Transtormer) | மெக்கேல் பாரடே | 1831 | பிரிட்டன் |
| மின்போர்வை (Electric Blanket) | வியன்னா கண்காட்சியில்-வைக்கப்பட்டது. | 1883 | அமெரிக்கா |
| மின்விளக்கு | தாமஸ் அல்வா எடிசன் | 1879 | அமெரிக்கா |
| மின்னணுக்கணிப்பொறி | டாக்டர்.ஆலன் எம்.டூரிங் | 1824 | பிரிட்டன் |
| மின்னல் கடத்தி(இடி தாங்கி) | பெஞ்சமின் பிராங்கிளின் | 1752 | அமெரிக்கா |
| முன்தள்ளி(கப்பல்) | பிரான்ஸிஸ் ஸ்மித் | 1837 | பிரிட்டன் |
| மூக்குக் கண்ணாடி (குவி) | | 1289 | வெனிஸ் |
| மோட்டார் சைக்கிள் | கான்ஸ்டாட் நகரின் ஜி.டெயில்மர் | 1885 | ஜெர்மனி |
| ரப்பர்(டயர்கள்) | தாமஸ் ஹான்காக் | 1846 | பிரிட்டன் |
| ரப்பர்(நீர் கசியாதது) | சார்லஸ் மாகின்டோஸ் | 1823 | பிரிட்டன் |
| ரப்பர்(பதனப்படுத்துதல்) | சார்லஸ் குட் இயர் | 1841 | அமெரிக்கா |
| ரப்பர் (பால்நுரை) | டன்லப் ரப்பர் கம்பனி | 1928 | பிரிட்டன் |
| ரூபிக் கனசதுரம்(Rubik Cube) | பேராசிரியர் எர்னோ ரூபிக் | 1975 | ஹங்கேரி |
| ரேடார் | ஏ.எச்.டெய்லர் மற்றும் லியோசியங் | 1922 | அமெரிக்கா |
| லிஃப்ட் இயந்திரம்(Mechanical lift) | எலிஷா ஜி.ஒட்டிஸ் | 1852 | அமெரிக்கா |
| லனோலியம் | பிரெடரிக் வால்டன் | 1860 | பிரிட்டன் |
| லேசர் | டாக்டர் சார்லஸ் எச்.டவுண்ஸ் | 1960 | அமெரிக்கா |
| வனிம விளக்கேற்றி | விலியம் மர்டாக் | 1792 | பிரிட்டன் |
| வானொலித் தந்தி | டாக்டர்.மாஹ்லோன லூயிஸ் | 1864 | அமெரிக்கா |
| வானொலித் தந்தி(அட்லாண்டிக்குறுக்காக) | ஜி.மார்க்கோனி | 1901 | இத்தாலி |
| விசைத்தறி (Power-loom) | இ.கார்ட்ரைட் | 1785 | பிரிட்டன் |
| விண்சறுக்கி | சர்.ஜார்ஜ் காய்லி | 1853 | பிரிட்டன் |
| விண்மாடங்கள் | டபிள்யூ லி.பாரோனஜென்னி | 1882 | அமெரிக்கா |
| வெப்ப அளவி(Thermometer) | கலிலியோ கலிலீ | 1593 | இத்தாலி |
| ஜெட் எஞ்சின் | சர்க்பிராங் விட்டில் | 1937 | பிரிட்டன் |
| ஹெலிகாப்டர் | எதியன் ஒஹ்மிச்சென் | 1924 | பிரான்சு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| இரத்த ஓட்டம் | வில்லியம் ஹார்வே | 1628 | பிரிட்டன் |
| உயிர் வேதியியல் | ஜான் பாட்டிஸ்டாவான் ஹெல்மோன்ட் | | பெல்ஜியம் |
| நுண்ணுயிரிகள் பாக்டீரியா | லியுவென்ஹாக் | 1683 | ஹாலந்து |
| நரம்பியல் | பிரான்ஸ் ஜோசப்கால் | 1758 1828 | ஜெர்மனி |
| உடலியங்கு இயல் | ஆல்பிரெச்சட் வான்ஹால்லர் | 1757-66 | சுவிட்சர்லாந்து |
| அம்மைப்பால் தடுப்பு | எட்வர்டு ஜென்னர் | 1596 | பிரிட்டன் |
| திசுவியல் | மேரி பிச்சாட் | 1771 1802 | பிரான்சு |
| ஸ்டெதஸ்கோப் | ரீனிலாயென்னக் | 1819 | பிரான்சு |
| உட்கருவியல் | கார்ல் ஏர்னஸ்வான் பேயர் | 1792 1896 | எஸ்தோனியா (சோவியத் ரஷ்யா) |
| மார்பின் (Morphine) | பிரெடரிக் செர்ட்டர்னர் | 1805 | ஜெர்மனி |
| குளோரோபாம்(மயக்கமருந்து) | ஜேம்ஸ் சிம்ஸன் | 1847 | பிரிட்டன் |
| "ராபிஸ்"-தடுப்பு (வெறிவிலங்குக்கடி மருந்து) | லுயிஸ் பாஸடர்) | 1860 | பிரான்ஸ் |
| நுண்கிருமி இயல் | பெர்டினன்ட் கான் | 1872 | ஜெர்மனி |
| தொழுநோய் நச்சுயிர் | ஹான்சன் | 1873 | நோர்வே |
| காலரா, காசநோய் நச்சுயிரிகள் | ராபர்ட் காச் | 1877 | ஜேர்மனி |
| மலேரியா நச்சுயிரிகள் | லாவெரான் | 1880 | பிரான்சு |
| தொண்டை அடைப்பான நச்சுயிரிகள்(Diphtheria germs) | கிளெப்ஸ் லோஃப்லர் | 1883 | ஜெர்மனி |
| ஆஸ்பிரின் (Aspirin) | டிரெசர் | 1889 | ஜெர்மனி |
| நோய்நுண்டி நச்சாய்வு இயல் (வைரஸ்) | இவானோவஸ்கி பாஜெர்னிக | 1992 | சோவியத் ரஷ்யா ஹாலந்து |
| உளவியல் பகுப்பாய்வு | சிக்மண்ட் ஃபிராய்டு | 1895 | ஆஸ்திரியா |
| இரத்த நிணநீரியல் | பால்ஏரிலிச் | 1884-1915 | ஜேர்மனி |
| எதிர்ப்பு மருந்துகள் (நோயெதிர்ப்பு இயல்) | பேரிங் மற்றும்கிதாசாட்டோ | 1890 | ஜேர்மனி |
| அட்ரீனலின்(Adrenaline) | ஷாஃபரும் ஆலிவரும் | 1894 | பிரிட்டன் |
| நாளமில்லாச் சுரப்பி | பேஸ்ஸிஸ், ஸ்டார்லிங் | 1902 | பிரிட்டன் |
| மின் இதயத்துடிப்பு இயல் (Electro-Cardiograph) | எய்ந்தோவன் | 1906 | ஹாலந்து |
| விஷச்சுரம் தடுப்பு மருந்து(Typhys Vaccine) | ஜெ.நி.கோலி | 1909 | பிரான்ஸ் |
| பாலுணர்ச்வுச் சுரப்பி நீர் (Sex Horomones) | இயூகென் ஸ்டீனாக் | 1910 | ஆஸ்திரியா |
| வைட்டமின்கள் (ஊட்டச்சத்துக்கள்) | சர் எஃப் ஜே.ஹாப்கின்ஸ் | 1912 | பிரிட்டன் |
| வைட்டமின் சி | ஃபிரோலிக் ஹோல்ஸ்ட | 1912 | நோர்வே |
| வைட்டமின் பி | மக்கொல்லம் | 1916 | அமெரிக்கா |
| செயற்கை விஷமுறிவுகள் | லாண்டஸ்டீனர் | 1917 | அமெரிக்கா |
| தைராக்சின் | எட்வர்டு கால்வின்கொண்டால் | 1919 | அமெரிக்கா |
| நீரிழிவிற்கு இன்சுலின் | பாண்டிங் மற்றும் பெல்ட | 1922 | கனடா |
| வைட்டமின் டி | மக்கொல்லம் | 1922 | அமெரிக்கா |
| வைட்மின் பி | மினோட் மற்றும் மர்ஃபி | 1928 | பிரிட்டன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| பென்சிலின் | அலெக்சாண்டர் பிளமிங் | 1928 | பிரிட்டன் |
| கார்டிசோன் (Cortisone) | எட்வர்ட் கால்வின்கென்டால் | 1936 | அமெரிக்கா |
| டைக்குளோரோடை ஃபனைல் | பால்முல்லர் | 1939 | ஜெர்மனி |
| டிரைகுளோரோ ஈத்தேன எனப்படும் டி.டி.ட்.டி (D.D.T) | கார் லாண்ட்ஸ்டின் | 1940 | அமெரிக்கா |
| இரத்த ஆர்.எச்.காரணி | | | |
| விசர்ஜிக் அசிட்டை ஈத்தல் | ஹாஃப்மான் | 1943 | சுவிட்சர்லாந்து |
| ஆமைடு என்னும் எல்.எஸ்.டி (L.S.D) | செல்மன்வாக்ஸ்மான் | 1944 | அமெரிக்கா |
| சிறுநீரக எந்திரம் | கால்ஃப் | 1947 | ஹாலந்து |
| குளோரோமைசிட்டின் | பாக்ஹோல்டர் | 1948 | அமெரிக்கா |
| ஆரியோமைசின் | டக்கர் | 1949 | அமெரிக்கா |
| ரிசெர்ப்பைன் | ஜல்வக்கில் | 1949 | இந்தியா |
| டெர்ராமைசின் | ஃபின்லேயும் ஏனையோரும் | 1950 | அமெரிக்கா |
| குளிர் அறுத்துவம் | ஹென்றி ஸ்வான் | 1953 | அமெரிக்கா |
| இதயம் வகிர் அறுத்துவம் | வால்டன் வில்லேஹல் | 1953 | அமெரிக்கா |
| இளம்பிள்ளைவாதத் தடுப்பூஊசி | ஜோன்ஸ்சாக் | 1954 | அமெரிக்கா |
| இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்து வாய்வழி | ஆல்பர்ட் சாபின் | 1954 | அமெரிக்கா |
| கருத்தடை மாத்திரைகள் | பின்கஸ் | 1955 | அமெரிக்கா |
| அறுவைச் சிகிச்சையின் போது செயற்கை இதயம் பயன்படுத்துதல் | மைக்கல்டி பார்க்கி | 1963 | அமெரிக்கா |
| இதயமாற்று அறுவை சிகிச்சை | கிறிஸ்டியன் பர்னார்டு | 1967 | தென்அமெரிக்கா |
| முதல் சோதனைக்குழாய் குழந்தை | ஸ்டேப்டோ மற்றும் எட்வர்ட்ஸ் | 1978 | பிரிட்டன் |
| மனிதரில் ஜீன் மருத்துவம் | மார்டின் கிளைவ் | 1980 | அமெரிக்கா |
| சின்னம்மை நோய் ஒழிப்பு | உலக சுகாதார நிறுவன அறிவிப்பு | 1980 | |

பகைமையால் எப்போதும் அழிவுதான். அன்பு ஒருபோதும் மடிவதில்லை

- மகாத்மா காந்தி

நம் கண் முன்பு உள்ளதைச் செய்வதே நம் மேலான கடமை

- கார்லைல்

நீ உன் வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் உன்னுடைய கால்களால் நடந்து போ. மற்றவர்களின் முதுகின்மேல் ஏறிப்போக விரும்பாதே அது உனக்கு ஆபத்து.

- நியேட்சே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கோப்பை(கால்பந்து) வருடங்கள் பெற்ற நாடு

| | |
|---|---|
| 1930 | உருகுவே |
| 1934 | இத்தாலி |
| 1938 | இத்தாலி |
| 1950 | உருகுவே |
| 1954 | மேற்கு ஜேர்மனி |
| 1958 | பிரேசில் |
| 1962 | பிரேசில் |
| 1966 | இங்கிலாந்து |
| 1970 | பிரேசில் |
| 1974 | இங்கிலாந்து |
| 1978 | பிரேசில் |
| 1982 | மேற்கு ஜேர்மனி |
| 1986 | அர்ஜென்டினா |
| 1990 | மேற்குஜோமனி |
| 1994 | பிரேசில் |
| 1996 | ஆஸ்திரேலியா |
| 1998 | பிரான்சு |

1942, 1946 இரண்டு ஆண்டுகளுக்கு விளையாட்டு நடை பெறவில்லை.

உங்கள் தோல்விகளை நினைத்துப் பார்த்து ஏன் தோற்றோம் என்று ஆராய்ந்து தோல்வியின் காரணத்தை தவிர்த்து வெற்றியடையுங்கள் என்கிறார்கள். அதற்குப் பதிலாக உங்கள் வெற்றிகளை ஆராயுங்கள் அவற்றுக்குக் காரணமாக இருந்த பண்புகளையும் பின்பற்றுங்கள். தொடர்ந்து வெற்றியடைவீர்கள்.

\- ஹல்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக் நடைபெற்ற இடங்கள்

| ஆண்டு | இடம் | காலம் |
|---|---|---|
| 1896 | ஏதன்ஸ் | ஏப்ரல்.6 - 15 |
| 1900 | பாரீஸ் | மே.20 - அக்.28 |
| 1904 | செயின்ட் லூயிஸ் | ஜூலை.1 - நவ.23 |
| 1906 | ஏதென்ஸ் | ஏப்.22 - மே 1 |
| 1908 | லண்டன் | ஏப்.27 |
| 1912 | ஸ்டாக்ஹோம் | மே.5 - ஜூலை.22 |
| 1916 | பெரிலின் | போரால் நிறுத்தம் |
| 1920 | ஆன்ட்வெர்ப் | ஏப்.20 - செப்.12 |
| 1924 | பாரிஸ் | மே.4 - ஜூலை.21 |
| 1928 | ஆம்ஸ்டர்டாம் | மே.17 - ஆகஸ்ட்.12 |
| 1932 | லாஸ்ரங்சலிஸ் | ஜூலை.30 - ஆக.14 |
| 1936 | பெர்லின் | ஆகஸ்ட் 1-15 |
| 1940 | டோக்கியோ (பின்ஹெல்சிங்கி) | நடத்தப்படவில்லை |
| 1944 | லண்டன் | போரால் நிறுத்தம் |
| 1948 | லண்டன் | ஜூலை.30 - ஆக.14 |
| 1952 | ஹெல்சிங்கி | ஜூலை.19 - ஆக.3 |
| 1956 | ஸ்டாக்ஹோம் மெல்பர்ன் | ந.22 - டிசம்.8 |
| 1960 | ரோம் | ஆக.25 - செப்.11 |
| 1964 | டோக்கியே | அக.10 - 24 |
| 1968 | மெக்ஸிகோசிட்டி | அக்.12 - 27 |
| 1972 | மியினிக் | ஆக.26 - செப்.10 |
| 1976 | மான்ரியால் | ஜூலை.17 - ஆக.1 |
| 1980 | மாஸ்கோ | ஜூலை.19 - ஆக.3 |
| 1984 | லாஸ்ஏங்சலிஸ் | ஜூலை.28 - ஆக.12 |
| 1988 | சோல் | செப்.17 - ஆக.2 |
| 1992 | பார்சிலோனா | ஜூலை.25 |
| 1996 | அட்லாண்டா | |
| 2000 | ஆஸ்திரேலியா -சிட்னி | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் சிறப்புச்செய்திகள்

1) இலங்கையின் பழைய பெயர்கள் எவை?
தப்ரபேன், ஈழம்,(எலு), இலங்காபுரி

2) இலங்கையின் வடபிரதேசம் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் பெற்றிருந்த பெயர் என்ன?
நாகதீவு

3) இலங்கையின் முதல் அரசன் யார்?
இராவணேஸ்வரன்

4) இலங்கையின் வரலாற்றைக் கூறும் சிங்கள நூல்கள் எவை?
மகாவம்சம், தீபவம்சம், சூழவம்சம்

5) இலங்கையின் ஆதிக்குடிகள் எவை?
இயக்கர், நாகர் என்ற திராவிட பரம்பரையினர்

6) அந்நியர் வருகைக்கு முன்னர் இலங்கை எத்தனை பிரிவுகளாக இருந்தன?
இராசரட்டை, மாயரட்டை, உறுகுணரட்டை

7) சிங்கள மொழியின் தோற்றக்காலம் எது?
சுமார் 1000 வருடங்கள்

8) சிங்கள மொழியில் பரவலாக காணப்படும் மொழிச்சொற்கள் எவை?
தமிழ், பாளி, சமஸ்கிருதம்

9) "ஆற்றிடைக்குறை" என்பது எது?
இலங்கை ஆகும்.

10) இலங்கைப் படத்தை முதலில் வரைந்தவர் யார்?
தொலமி கி.பி 2ம்நூற்றாண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11) தொலமியின் இலங்கைப் படத்தில் வடபகுதியின் பெயர் என்ன?
நாகதீவு

12) இலங்கையின் வரலாற்றுத் தொடர்பான நூல்கள் எழுதியவர் யார்?
றோபேட் நொக்ஸ்

13) இலங்கை எப்போது குடியேற்ற நாடாக்கப்பட்டது?
1802 இல்

14) இலங்கை முழுவதும் பிரித்தானிய ஆதிக்கத்தின் கீழ் வந்த காலம் எப்போது?
1815இல்

15) கண்டித் தமிழ் இராச்சியம் வீழ்ச்சியடைந்த காலம் எப்போது?
1815இல்

16)வன்னித் தமிழ் வீழ்ச்சியடைந்த காலம் எப்போது?
1803இல்

17)இலங்கைத் தேசிய காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?
1919இல்

18) தேசிய காங்கிரசை நிறுவியவர் யார்?
சேர்.பொன்.அருணாசலம்

19)டொனமூர் அரசியல் திட்டம் வந்த காலம் எப்போது?
1931 இல்

20) சோல்பெரி அரசியல் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது எப்போது?
1947இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21) 21 வயதினர்க்கு வாக்குரிமை வழங்கப்பட்டது எப்போது?
1931 இல்

22) பாராளுமன்ற ஆணையாளரைக் குறிக்கும் சொல் எது?
ஓம்புட்ஸ்மன் (தனி ஆணையாளர்)

23) இலங்கையின் ஆரம்பகால அரசியல் வாதிகள் யார்?
சேர்.பொன்.இராமநாதன், சேர்.பொன்.அருணாசலம்
எப்.ஆர்.செனனாயக்கா டி.எஸ்.செனனாயக்கா

24) இலங்கையின் தற்போதைய நிர்வாகமாவட்டங்கள் எத்தனை?
25

25) இலங்கையின் உள்ளூராட்சி நிறுவனங்கள் எவை?
கிராமசபை, நகரசபை, மாநகரசபை

26) பிரதேச, மாகாணசபை தோற்றுவிக்கப்பட்ட காலம் எது?
1987 இல்

27) இலங்கையில் சுதந்திர அரசியல் சட்டம் ஆக்கப்பட்ட ஆண்டு எது?
1942 இல்

28) சுதந்திர அரசியல் சட்டத்தில் தமிழர்களுக்கு பாதுகாப்பாக இருந்தது எது?
29வது விதி

29) இலங்கையின் முதல் குடியரசு அரசியல் சட்டம் ஆக்கப்பட்ட காலம் எது?
1972

30) இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஏற்பட்ட காலம் எது?
1978



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31) சிங்களம் மட்டும் சட்டமாக்கப்பட்ட ஆண்டு எது?
1956

32) மலையகத் தமிழர்களின் குடியுரிமை பிரசாவுரிமை நீக்கப்பட்ட காலம் எது?
1949 இல்

33) சொத்துரிமை தொடர்பான டச்சுக்காரர் புகுத்திய சட்டத்தின் பெயர் என்ன?
தேசவழமை

34) சுதந்திர இலங்கையின் முதல் தேசாதிபதி யார்?
சோல்பரிப்பிரபு

35) இலங்கை குடியரசில் முதல் தேசாதிபதி யார்?
சேர்.ஹென்றி மொங்மேசன்மூர்

36) இலங்கையின் முதல் அரசியல் சட்டம் யாரால் எழுதப்பட்டது?
சேர்.ஜவர் ஜெனிங்ஸ்

37) கற்சிலைமடுப் போருடன் தொடர்புடைய அரசன் யார்?
பண்டாரவன்னியன்

38) இலங்கையின் முதலாவது பிரதமமந்திரி யார்?
திரு.டி.எஸ்.செனநாயக்கா

39) 19ம் நூற்றாண்டில் பௌத்தமத மறுமலர்ச்சிக்கு பாடுபட்டவர் யார்?
அநாகரிக தர்மபால

40) கண்டியரசனை வெள்ளைக் காரருக்குக் காட்டிக் கொடுத்தவர் யார்?
ஏகலப்பொல

41) சேர் பட்டம் பெற்ற முதல் இலங்கையர் யார்?
ஆனந்தக்குமாரசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதான வைத்தியசாலைகளும் ஆராய்ச்சி நிலையங்களும்

| | |
|---|---|
| புற்றுநோய் வைத்தியசாலை | - மகரகம |
| தொழுநோய் வைத்தியசாலை | - மாந்தீவு |
| ஆயுள்வேத ஆராய்ச்சி நிலையம் | - நாவின்ன |
| மேல்நாட்டு வைத்திய ஆராய்ச்சி நிலையம் | - கொழும்பு |
| காசநோய் ஆஸ்பத்திரி | - காங்கேசன்துறை |

# குறிப்பிடத்தக்க நிலையங்கள்

| | |
|---|---|
| உல்லாசப் பிரயாணிகளின் வருகை | - கிக்கடுவ |
| பறவைகள் சரணாலயம் | - குமணைக்காடு |
| நன்னீர்க்குளம் | - கீரிமலை |
| நிலையான ஊற்று | - நிலாவரை |
| மிருகங்களின் சரணாலயம் | - வில்பத்துக்காடு, யால |
| சுதந்திர வர்த்தக நிலையம் | - கட்டுநாயக்கா |

நீ ஆசையற்றவனானால் அமைதியையும், மேலான இன்பத்தையும் அடையலாம்.

- கீதைச் சிந்தனை

பெண் இளமையில் மனைவி, நடுத்தர வயதில் உற்ற நண்பர், வயதானபோது பணிப்பெண்

- பிரான்ஸிஸ் பேக்கன்

ஒரு தீயவனை வென்றுகாட்ட இன்னொரு தீயவன் எப்போதும் உண்டு

-ஒரு மகான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நீதித்துறையின் சிறப்பு செய்திகள்

1) பிரிவிடல் (Partition) விடயமாக எந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும்?
மாவட்ட நீதிமன்றம்

2) வழியுரிமை சொத்து நம்பிக்கை பொறுப்பு விடயங்களில் எந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும்?
மாவட்ட நீதிமன்றம்

3) ஜனாதிபதி மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் சம்பந்தமாக எந்த நீதிமன்றத்தில் வழங்கு தாக்கல் செய்யவேண்டும்?
உயர்நீதிமன்றம்

4) பராமரிப்பு சம்பந்தமாக எந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தல் வேண்டும்?
நீதவான் நீதிமன்றம்

5) நியாயமற்ற வேலை நீக்கம் சம்பந்தமாக எந்த நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும்?
தொழில் நியாயமன்று

6) பாராளுமன்ற சிறப்புரிமை மீறல் அரசியலமைப்பு பொருள் கோடல் சம்பந்தமாக எந்த நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய முடியும்?
உயர்நீதிமன்றம்

7) ஆட்கொலை, கற்பழிப்பு சம்பந்தமாக எந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யமுடியும்?
மேல் நீதிமன்றம்

8) வருமானவரி சம்பந்தமான வழக்குகளை எந்த நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யமுடியும்?
மாவட்ட நீதி மன்றம், நீதிவான் நீதிமன்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் பிரதான தொழிற்சாலைகளும் ஆராய்ச்சி நிலையங்களும்.

| | |
|---|---|
| பிறிமா ஆலை | - திருகோணமலை |
| இல்மனைற் தொழிற்சாலை | - புல்மோட்டை |
| உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிலையம் | - றங்கல |
| தேயிலை ஆராய்ச்சி நிலையம் | - தலவாக்கொல்ல |
| இறப்பர் ஆராய்ச்சி நிலையம் | - அகலவத்தை |
| தெங்குப்பொருள் ஆராய்ச்சி நிலையம் | - வென்னப்புல, லுனுவில |
| கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி | - அங்குலானை |
| கமத்தொழில் ஆராய்ச்சி நிலையம் | - குண்டகசாலை, மகாஇலுப்பலாம |
| கரும்பு ஆராய்ச்சி நிலையம் | - அங்குன, பலஸ்ஸ |
| அவரை(சோயாஅவரை)ஆராய்ச்சிநிலையம் | - பல்லேகல |
| நெல் ஆராய்ச்சி நிலையம் | - பந்தலகொட, கண்ணொருப<br>-கிங்கராக்கொடை, மகாஇலுப்பள்ளம் |
| அரிசி உற்பத்தி ஆய்வு நிலையம் | - அநுராதபுரம் |
| இரசாயன உப்புத்தொழிற்சாலை | - பரந்தன் |
| பெற்றோலியஎண்ணெய் சுத்திகரிப்புநிலையம் | - சப்புகஸ்கந்த |
| சீமெந்து தொழிற்சாலை | - காலி, புத்தளம், காங்கேசன்துறை |
| மட்பாண்டத்தொழிற்சாலை | - பிலியந்தல |

தேவைக்குப் போதுமான செல்வம் உன்னைச் சுமக்கும் தேவைக்கு அதிகமான செல்வம் உனக்குச் சுமையாகும்.

- ஓர் அறிஞர்

பெரிய மலைகளைக் கூடப் புரட்டி விடலாம். மனதை அடக்குவதுதான் கடினம்.

- அறநெறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடுகளின் பழைய பெயர்களும் புதிய பெயர்களும்.

| பழைய பெயர் | புதிய பெயர் |
|---|---|
| அபிசீனியா (Abyssinia) | - எதியோப்பியா (Ethiopia) |
| கம்போடியா (Cambodia) | - கம்பூச்சியா (Kampuchea) |
| சிலோன் (Ceylon) | - ஸ்ரீலங்கா (Sri Lanka) |
| கொங்கோ (Congo) | - ஷெயர் (Zaire) |
| டச்சு கிழக்கிந்தியா (Dutch East Indies) | – இந்தோனிஷியா (Indonesia) |
| கோல்ட் கோஸ்ற் (Gold Coast) | - கானா (Ghana) |
| ஹொலன்ட் (Holland) | – நெதர்லாந்து (Netherland) |
| மெசோபோரேமியா(Mesopotamia) | - ஈராக் (Iraq) |
| வட றொடீசியா (Nothern Rhodesia) | - சம்பியா (Zambia) |
| தென்றொடீசியா(Southern Rhodesia) | - சிம்பாப்வே (Zimbabwe) |
| பாரசீகம் (Persia) | - ஈரான் (Iran) |
| சீயம் (Siam) | - தாய்லாந்து (Thailand) |
| தென்மேற்கு ஆபிரிக்கா | – நமீபியா (Namibia) |
| ரங்கனிக்காவும் சான்சிபாரும் (Tanganyika and Zanzibar) | – தான்சானியா (Tanzania) |
| பெக்குவானாலாந்து(Bechuanaland) | – பொற்ஸ்வானா (Botswana) |
| பர்மா ((Bruma) | - மியான்மர் |
| மலாயா (Malaya) | - மலேசியா (Malaysia) |
| போர்மோசா (Formosa) | - தாய்வான்(Taiwan) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரித்தானிய ஆட்சியில் யாழ்ப்பாணம்

பிரித்தானிய ஆட்சியின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் எப்படி இருந்தது என்பதை அறியும்போது பல சுவையான தகவல்கள் நமக்குக் கிடைக்கின்றன.

மனிதன் செய்யும் குற்றங்களுக்காக வழங்கப்பட்ட சித்திரவதைத் தண்டனை 1803ல் நிறுத்தப்பட்டது. குற்றங்களை விசாரித்துத் தண்டனை வழங்குவதற்காக பொலிஸ் நீதி மன்றங்கள் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, முல்லைத்தீவு, பருத்தித்துறை, சாவகச்சேரியில் 1841ம் ஆண்டு ஆடி மாதம் 13ந் திகதி ஆரம்பிக்கப்பட்டன. விதானையார் முறை 1806ல் ஒவ்வொரு கிராமத்திலும் அமுலுக்கு வந்தது. சேர்.அலெக்ஸாண்டர் யோன்ஸ்சோன் யூரி முறையை 1812ல் ஏற்படுத்தினார். இராஜகாரிய முறை அரசிற்கு இலவசசேவை செய்து 1802ல் ஒழிக்கப்பட்டது.

பிரயாணங்கள், தபால் கொண்டு செல்வதெல்லாம் மாட்டு வண்டியிலேயே இருந்தன. யாழ்ப்பாணத்திலிருந்து கண்டிக்கு வண்டியில் போய்வர இருபது அல்லது முப்பது நாட்கள் சென்றன. யாழ்ப்பாணத்திற்கும் மாத்தளைக்கும் தபால் கொண்டு செல்வதற்கு 1878ல் அனுமதிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை, பருத்தித்துறைக்கு கால் நடையாகவே தபால்கள் எடுத்துச் செல்லப்பட்டன. ஒரு மணித்தியாலம் $2\frac{1}{2}$ மைலைக் கடக்கவே அவர்களால் முடிந்தது.

யாழ்ப்பாணத்தில் ஆசைப்பிள்ளை என்பவர் குதிரை வண்டிச் சேவையை முதன் முதல் நடாத்தினார். படிப்படியாக முன்னேறி யாழ்ப்பாணத்திலிருந்து மாத்தளைக்கும் குதிரை வண்டிச் சேவையை விஸ்தரித்தார். பணக்காரர்கள் பல்லக்குகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபயோகித்தனர். அரச உத்தியோகஸ்தர்களில் நீதிவான், பிரபுக்கள் பல்லக்கிலேயே போக்குவரத்துச் செய்தனர்.

இலங்கைக்கு 1883லேயே றிக்சோ அறிமுகமானது. 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மிஷனரிமார் யாழ்ப்பாணம் வந்த போது சயிக்கிள் உபயோகிக்கப்பட்டது. அக்காலத்தில் போக்குவரத்திற்குக் குதிரைகளும் பாவிக்கப்பட்டன. யாழ்ப்பாணத்திற்குப் புகையிரதம் வரவேண்டுமென்று பலதுறைப் பெரியார்கள் முயற்சித்தார்கள். சட்ட நிரூபணசபையில் சேர்.பொன்.இராமநாதன் இதற்கான தீர்மானத்தைக் கொண்டு வந்தார். இதன் பயனாக 1906ல் புகையிரதம் யாழ்ப்பாணம் வந்தது. ஊர்காவற்துறை, காங்கேசன்துறை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை என்பன முக்கிய துறைமுகங்களாக இருந்தன. காங்கேசன்துறை துறைமுகம் 1851ல் திறக்கப்பட்டது. அப்போது யாழ்ப்பாண அரச அதிபராயிருந்த டைக்என்பவர் இதற்கு முன்னின்றுழைத்தார்.

லேடி வீறவலொக், டேடிலி ஹோடன், அத்தாசியா என்ற நீராவிக் கப்பல்கள் சேவையிலிருந்தன. யாழ்ப்பாணத்திலிருந்து நாகப்பட்டினம் நீராவிக்கப்பல் பயணம் செய்யப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து இலங்கையில் வேறு பட்டினங்களுக்கு முத்திரை ஒட்டப்பட்ட தபால் போக்கு வரத்து 1855 ஆடி மாதம் ஏற்பட்டது. டெலிபோன் வசதி 1867ல் ஏற்பட்ட சில வருடங்களில் யாழ்ப்பாணத்திற்கு டெலிபோன் வசதி கிடைத்தது. முதன் முதல் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த புதினப்பத்திரிகை மோணிங்ஸ்ரார் என்ற ஆங்கிலப்பத்திரிகையாகும். இது 1841ல் வெளிவந்தது. இதன் தமிழாக்கம் உதய தாரகை என்ற பெயரில் வெளிவந்தது. அப்புக்காத்து கூல் என்பவர் யவ்னா பிறீமான் என்ற இலக்கிய பத்திரிகையை ஆங்கிலத்தில் 1862 செப்டெம்பர் 8ந் திகதி வெளியிட்டார். சி.டபிள்யூ.கதிர்வேற்பிள்ளை 1863ல் சிலோன் பற்றியற் என்ற பத்திரிகையை வெளியிட்டார். யாழ் கத்தோலிக்க மிஷனரிமார் கத்தோலிக்க காடியனை 1875ல் அறிமுகப் படுத்தினார். சத்திய வேத பாதுகாவலன் என்று தமிழிலும் இதனைப் பிரசுரித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகைகள் யாழ்ப்பாணத்திலிருந்து மலேசியா வரை அனுப்பப்பட்டன. இவற்றுடன் 1880ல் உதயபானுவும், இலங்கா நேசனும் பிரபலமான இதழ்களாக இருந்தன. அ.முத்துத்தம்பிப் பிள்ளை என்பவர் தமிழில் வைத்திய புதினங்களை 1898ல் பிரசுரித்தார். ஆங்கில மருத்துவக் குறிப்புகள் தமிழில் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டன. சபாரத்தின முதலியார் என்பவர் 1812 புதினலங்காரியை வெளியிட்டார். சைவாபிமானி, ஞானப்பிரகாசம் என்பன 19ம் நூற்றாண்டின் பின் பகுதியில் பிரசுரமாயின. அச்சுவேலி எஸ்.தம்பிமுத்து என்பவர் சன்மார்க்க போதினியை 1884 லிலும், புலோலி குமாரசுவாமிப் புலவர் 1990 அளவில் திராவிட கோகிலத்தையும் வெளியிட்டார்.

யாழ்ப்பாணக் கச்சேரி 1815ல் கட்டப்பட்டது. சட்ட நூலகம் 1845இலும், விக்டோரியா நூதனசாலை 1895லும் நிறுவப்பட்டன. வெஸ்லின் மிஷனரிமார் 1817ல் யாழ்.மத்திய சல்லூரியையும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரியை 1872லும், உடுவில் பெண்கள் பாடசாலையை 1824ல் அமெரிக்கன் மிஷனரிமாரும், யாழ்ப்பாண கொன்வென்ரை ஐரோப்பிய றோமன் கத்தோலிக்க சபையும் (1963ல் அங்கு ஒரு பெண்கள் விடுதியையும்) முதலாவது யாழ்ப்பாண பிஷப் சென் பற்றிக்ஸ் கல்லூரியை 1850லும், வேம்படி மகளிர் கல்லூரியை வெஸ்லியன் மிஷனரிமார் 1877லும், சென்யோன்ஸ் கல்லூரியை 1891லும் ஏற்படுத்திய ஆங்கிலக் கல்வி வளர்ந்தோங்க உதவினர்.

ஆறுமுகநாவலர் அவர்கள் வண்ணார்பண்ணைச் சைவப் பிரகாச வித்தியாசாலையை 1848ல் நிறுவி மாணவருக்கு இலவசக் கல்வியை அளித்தார். தமிழ் சமஸ்கிருதம் இங்கு கற்பிக்கப் பட்டன. சைவபரிபாலன சபையினர் 1890ல் யாழ் இந்துக் கல்லூரியை நிறுவினர். இங்கு தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் என்பன பாட மொழிகளாக இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பமுடியாத உண்மைகள்!!

- கங்காருவின் குட்டி பிறந்தவுடன் ஓர் அங்குல உயரந்தான் இருக்கும்.
- நத்தையின் வேகம் மணிக்கு 23 அங்குலம், பற்கள் 135.
- உலகிலேயே முதல் வரியில்லாத நாடு – வடகொரியா.
- பிரான்ஸில் 1756.06.30 அன்று 9 வயதுச் சிறுமியொருத்தி ஆர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாய்.
- கடலில் வாழும் மீன்கள் கடல் நீரைக்குடிக்கின்றன. ஆனால் நன்னீரில் வாழும் மீன்கள் நன்னீரைக் குடிப்பதேயில்லை.
- மலேசியாவில் உள்ள ஒரு வகை மீன் மரங்களில் மேல் ஏறுகின்றது.
- 1793 ஆம் ஆண்டு பிரான்ஸில் ஒரு குழந்தை நெற்றிக் கண்ணுடன் பிறந்தது.
- யானையின் துதிக்கையில் மட்டும் 40,000 நரம்புகள் உள்ளன.
- இரையே இல்லாமல் பாம்பு 25 மாதங்களும் தவளை 16 மாதங்களும் மூட்டுப்பூச்சி 6 மாதங்களும் உயிர் வாழுமாம்.
- மிருகங்களுள் ஒரு சிறிய இதயமுள்ளது சிங்கம் தான். கலிபோர்னியாவிலே உள்ள பூனையொன்று நான்கு தலைகள் கொண்ட ஒரு குட்டியை ஈன்றெடுத்தது.
- பொதுவான பெண் யானைகளுக்குக் கொம்பு முளைப்பதில்லை என்பது தான் பலருடைய அபிப்பிராயம். ஆனால் ஆபிரிக்காக் கண்டத்தில் உள்ள பெண் யானைகளுக்குக் கொம்பு உண்டு.
- முள்ளம் பன்றியைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் அது ஒரு விலங்கு என்று தான் இதுவரை நினைத்திருப்பீர்கள். நீங்கள் நினைப்பது தவறு. அது மிருகமும் அல்ல பறவையும் அல்ல. இரண்டிற்கும் இடைப்பட்ட ஓர் இனத்தைச் சேர்ந்தது.
- வெந்நீர் ஏன் சுவையாக இருப்பதில்லை தெரியுமா? நீரைக் கொதிக்க வைக்கும்போது அதற்குச் சுவையூட்டும் வாயு வெளியேறிவிடுகிறது.
- கடலில் வாழும் மீனினங்களுள் மிகவும் வேகமாக நீந்தக்கூடியது சுறாமீன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருவரிப் பழமொழிகள் ஒரு சில....


1) கடவுளை நினைத்தவர் காலனை அஞ்சார்.
2) துணிந்தவருக்குத் துயரம் இல்லை.
3) ஊர் கூடினால் தான் தேர் இழுக்க முடியும்.
4) சாது மிரண்டால் காடு கொள்ளாது.
5) ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு.
6) திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை.
7) பள்ளிக் கணக்குப் புள்ளிக் குதவாது.
8) ஆற்றில் போட்டாலும் அளந்துபோடு.
9) நாய் வாலை நிமிர்த்த முடியாது.
10) தனிமரம் தோப்பாகாது.
11) புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.
12) யானை படுத்தால் குதிரை மட்டம்.
13) நெருப்பில்லாமல் புகையாது.
14) கோழி மிதித்துக் குஞ்சு சாகாது.
15) பல் போனால் சொல் போகும்.
16) கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.
17) ஒரு பானை சோற்றுக்கு ஒருசோறு பதம்.
18) எறும்பு ஊரக் கல்லும் தேயும்.
19) குந்தித் தின்றால் குன்றும் மாளும்.
20) உப்பிட்டவரை உள்ளளவும் நினை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாஜ்மஹால்

## ஒரு காதல் நினைவுச் சின்னம்



இந்தியாவின் ஆக்ரா நகரில் ஜமுனை நதியின் வலது கரையோரத்தில், சந்தர ஒளியிலிருந்து செதுக்கியது போன்று, தாஜ்மஹால் நினைவு மாளிகை, கடந்த 344 ஆண்டுகளாகக் காட்சி தந்து கொண்டிருக்கின்றது. புதிய உலக அதிசயங்களில் ஒன்றாக இந்தச் சலவைக்கல் பளிங்குமாளிகை துலங்குகின்றது. இந்தப் பளிங்கு மாளிகையைக் கட்டுவித்தவன் முகலாய சக்கரவர்த்தியான சார்ஜஹான் என்பவனாவான். மிகுந்த கலைத்துவத்தோடு உலகமே வியக்கும் வண்ணம் இந்த மாளிகையை அமைப்பித்துள்ளான். அவனுக்கு மூன்று மனைவியர் இருந்தும், அவனது காதலுக்குப் பாத்திரமான மும்தாய்மகால் என்பவளின் நினைவாக இந்த தாஜ்மஹாலை மன்னன் சார்ஜஹான் அமைப்பித்தான். வாழ்க்கையில் ஒவ்வொருவரும் தரிசிக்கவேண்டிய கலைப் பொக்கிசம் தாஜ்மஹால் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விப்படுகின்ற அழகினைவிட மிக அழகாக இருக்கின்ற ஒரு சிலவிடங்களில் தாஜ்மஹால் ஒன்று எனப் பிரபல நாவலாசிரியர் போல்பெக் கூறுகிறார். ஆக்ராவிற்கு விஜயம் செய்த அனைவரும் இதனை அங்கீகரித்துள்ளனர். தாஜ்மஹால் போல அதற்கு நிகராக எதுவுமில்லை. அது தனித்துவமான அற்புதம். பாரசீக, இந்து, இந்திய, இஸ்லாமிய மத கலாம்சங்கள் அனைத்தின் கூட்டு வடிவம். 19ஆம் நூற்றாண்டில் ஆக்ராவிற்கு வருகை தந்த சேர்.வில்லியம் ஹென்றி சிலிமன் தனது மனைவி அமிலியிடம் கேட்டார். "இந்த தாஜ்மஹாலைப் பற்றி என்ன நினைக்கிறீர்?"

"நான் நாளையே சாவதற்குத் தயார்" என்றாள் அமிலி, "இது போல என் நினைவாக எனக்கொரு மாளிகை கட்டப்படுமாயின்".

மகாராணி மும்தாஜ் மகால் 1593ஆம் ஆண்டு பார்சிகப் பிரபு ஒருவரின் மகளாகப் பிறந்தாள். மிகுந்த அழகுடையவள். அவ்வேளை அவள் அர்ஜுமான்ட் என அழைக்கப்பட்டாள். பதினைந்து பராயம் இருக்கும்போது முகலாய இளவரசனான சூர்ராம்(பிற்காலச் சக்கரவர்த்தி சார்ஜகான்) என்பவனுக்கு நிச்சயார்த்தம் செய்யப்பட்டாள். ஐந்து ஆண்டுகள் கழிந்த பின்னர். 1612மே மாதம் 20 ஆந் திகதி சோதிடர்கள் கணிப்பின்படி திருமணம் நிகழ்ந்தேறியது. இளவரசன் குர்ராம் தனது அழகு ராணிக்கு "மும்தாஜ் மகால்" எனப் பெயரிட்டான். அதனால் தான் சார்ஜகான் பின்னர் அவள் நினைவாகக் கட்டிய சலவைக்கல் மாளிகை "தாஜ்மஹால்" என்ற பெயரைப் பெற்றது.

முகலாயச் சக்கரவர்த்தி ஜகாங்கீர் என்பவனுடைய இரண்டாவது மனைவியின் மகன் இளவரசன் குர்ராம ஆவான். அவன் தனது இளமைப் பருவத்தில் மருத்துவம், புவியியல், சமயவியல் ஆகிய பாடங்களைக் கற்றுத் தேறியிருந்தான். தந்தையின் பின் முகலாய சாம்ராச்சியத்தின் சக்கர வர்த்தியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிசூடிக் கொண்டபோது அவன் தனது பெயரை சார்ஜகான் என மாற்றிக் கொண்டான். சிம்மாசனம் ஏறியதும் அரச கட்டிலிற்குப் போட்டியாக மாறக்கூடிய ஆண் உறவினர்கள் அனைவரையும் அழிப்பித்தான்.

சார்ஜகானுக்கும் மும்தாஜ் மகாலுக்கும் மொத்தமாகப் பதினான்கு பிள்ளைகள் பிறந்தார்கள். ஏழு பேர் இளவயதில் காலமானார்கள். 1631 ஜூன் மாதம் பதினான்காவது குழந்தைப்பேற்றின்போது மன்னனின் காதல் மனைவி மரணமடைய நேர்ந்தது. சார்ஜகான் தன் காதல் மனைவி மும்தாஜைக் கணமும் விட்டுப் பிரிய விரும்பாதவன் 1631 ஆம் ஆண்டு யுத்த களத்திற்கும் தன்னுடன் கூடவே கர்ப்பிணியான மும்தாஜை அழைத்துச் சென்றுள்ளான். இந்தப் பயணத்தின் விளைவாகவே பிள்ளைப் பேற்றின்போது அவள் மரணமடைய நேர்ந்தது. சார்ஜகான் பெரும் துன்பத்திற்குள்ளானான். அரண்மனையில் சங்கீதம் ஒலிக்கக் கூடாதென அறிவித்தான். நிற அங்கிகளை அணிவதைக் கைவிட்டான். அலங்காரச் சால்வைகளை அணியாது தவிர்த்தான். அரண்மனைப் பிரதானிகளைப் பார்ப்பதைத் தவிர்த்தான். எட்டு நாட்கள் தனிஅறை ஒன்றினுள் தனித்து இருந்து துக்கமனுஷ்டித்தான். உணவின்றியே அந்த நாட்களைக் கழித்தான். நீண்ட காலம் இவ்வாறு துயரத்தைக் கொண்டாடினான். அத்துயர வெளிப்பாடாகச் சலவைக் கற்களால் தனது இனிய மனைவிக்கு ஒரு நினைவு மாளிகையை உருவாக்க எண்ணினான்.

1632ஆம் ஆண்டு தாஜ்மஹால் கட்டிட வேலைகள் ஆரம்பமாயின. தனது அரண்மனையிலிருந்து எப்பொழுதும் பார்வையில் படக்கூடியதான இடத்தில், யமுனையின் வலது கரையில், தாஜ்மஹாலைக் கட்டுவதற்கான இடத்தைத் தேர்ந்தெடுத்துள்ளான். இருபதினாயிரம் வேலையாட்கள் இருபத்திரண்டு ஆண்டுகள் இரவுபகலாகத் தாஜ்மஹாலைக் கட்டியெழுப்ப உழைத்துள்ளனர். தாஜ்மஹாலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுவதற்கான வெண்சலவைக்கல் மக்ரானா, ராஜஸ்தான் மாநிலத்தின் ரய்யாலா ஆகிய இடங்களிலிருந்து வெட்டியெடுத்துக் கொண்டு வரப்பட்டது. நீலநிறக் கற்கள் (lapis lazuli) இலங்கையிலிருந்து தருவிக்கப்பட்டன. 40 வகையான பளிங்குக் கற்கள் தாஜ்மஹாலை அமைக்கப் பயன்பட்டுள்ளன. அவற்றோடு விலையுயர்ந்த வைரக் கற்கள் ஆங்காங்கு பொருத்தமாகப் பொருத்தப்பட்டிருந்தன இன்று அவை களவாடப்பட்டு விட்டன.

வெண் சலவைக்கற்கள் அற்புதமாக வெட்டப்பட்டு பிணைக்கப்பட்டுள்ளன. சலவைக் கற்களில் ஜன்னல்கள், வண்ண வேலைப்பாட்டுத் திரைகள், பூவேலைகள் என நுட்பமான கலைத்திறன் மிக்க செதுக்கல்கள் சிற்பிகளால் அமைக்கப்பட்டுள்ளன. மதத்திய ஆசியாவின் புக்காராப் பகுதியிலிருந்து பூவேலைகளைச் சலவைக்கற்களில் செதுக்குவோர் அழைத்து வரப்பட்டனர். தாஜ்மஹாலின் கோளக்கவிப்புகளை வடிவமைக்க கொன்ஸ் தாந்தி நோபிளிலிருந்து இஸ்மாயில் கான்ரூபி என்ற சிற்பக் கலைஞர் அழைக்கப்பட்டார். தாஜ்மஹாலின் சுவர்களில் எழுத்துக்களைப் பொறிப்பதற்காக அமாறட்கான் சிராசி என்பவர் நியமிக்கப்பட்டார். எல்லா நிபுணர்களையும் இணைத்து தாஜ்மஹாலை உருவாக்கி முடிக்கும் கட்டிடக் கலைஞராக லாகூரைச் சேர்ந்த உஸராட் அகமத் என்பவர் விளங்கினார். தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டிடக் கலைஞர்கள், சிற்பிகள் ஆகியோரின் 22 வருட கூட்டு முயற்சியின் விளைவாகத் தாஜ்மஹால் எழுந்தது.

தாஜ்மஹாலின் முன் பக்கத்தில பெரும் பூந்தோட்டமும் தாஜ்மஹாலின் முழு வடிவைப் பிரதிபலிக்கும் தடாகமும் உள்ளது. வான் நோக்கி உயர்ந்து ஒளிரும் தாஜ்மஹாலை, கீழ்நோக்கி தாடக நீரில் அதன் பிரதிபிம்பத்தைக் காண்பது ஓர் இனிய அனுபவம். தாஜ்மஹால் 22 அடி உயரமான மாபிள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தள மேடையில் அமைக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ 313 சதுர அடிப்பரப்பினதாக இந்த மாபிள் தளமேடையுள்ளது. இந்த மேடையின் நான்கு மூலைகளிலும் 137 அடி உயரமான மினாராத் எனப்படும் கோபுரங்கள் அமைந்துள்ளன. இந்த 22 அடி உயரமான மாபிள் மேடைக்கு அழைத்துச் செல்லும்பளிங்குக் கற்படிகளுள்ளன. காலணிகளைக் கழற்றி விட்டே இந்தப் படிகளில் ஏறிச் செல்ல வேண்டும். தாஜ்மஹாலின் பிரதான வளைவு வாசலில், கரும் சலவைக்கல்லில் குரான் வார்த்தைகள் பொழியப்பட்டுள்ளன. உள்ளே செல்லில் மும்தாஜ் மகாலினதும், மன்னன் சார்ஜகானினதும் சமாதிகளைக் காணலாம். அற்புதக் கைவண்ணம் மிக்க சமாதிகள; சலவைக்கல் பலகைகளில் வண்ண வேலைப்பாடுகள், அந்த சமாதிகளை வேலியிட்டுள்ளன. சரி மத்தியில் மும்தாஜின் சமாதியுள்ளது. அதன் அருகில் வடிவில் சற்றுப் பெரிதான சார்ஜகானின் சமாதி அமைக்கப்பட்டுள்ளது. பார்சிக் மொழியில் மும்தாஜின் சமாதியில் "மும்தாஜ் மகால் என்றழைக்கப்பட்ட அர்ஜுமான்ட் பானுபேகம் சமாதி. இறந்த ஆண்டு 1040 AH (1631 AD)" எனப் பொறிக்கப்பட்டுள்ளது.

மும்தாஜின் வலது பக்க சமாதியல் சார்ஜகான் உறங்குகிறார். சார்ஜகான் தன் காதல் மனைவிக்காகக் கட்டிய தாஜ்மஹாலில் தன்னை அடக்கம் செய்து கொள்ள விரும்பியிருக்கவில்லை. அவன் தனக்கென கருமையான சலவைக்கற்களால் இன்னொரு மகாலை யமுனை நதியின் இடது கரையில் கட்டுவதற்குத் திட்டமிட்டான். இந்த இரு மகால்களையும் ஒரு பாலத்தால் இணைக்கவும் எண்ணியிருந்தான். ஆனால் அவனை அடுத்து சக்கரவர்த்தியான அவுரங்கசீப், "எனது தந்தையின் காதலுக்குப் பாத்திரமானவளின் அருகிலேயே அவரையும் அடக்கம் செய்வதே பொருத்தமானது" என எண்ணிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுத்தினான். உண்மையில் தாஜ்மஹாலின் மாளிகை மத்தியில் உள்ள சமாதிகளுக்கு நேர் கீழே இருக்கின்ற அறையில்தான் அவர்களின் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. கீழேயுள்ள சுரங்க அறைக்குள் ஒடுங்கிய படிகள் மூலம் இறங்கிச் செல்லில் அவற்றைக் காணலாம்.

மும்தாஜ் மகால் இறந்ததன் பின்னர் 35 ஆண்டுகள் வரை சார்ஜகான் வாழ்ந்தான். அவனுடைய இறுதிக் காலம் இனிமையானதன்று அவனுடைய புதல்வர்கள் சிம்மாசனத்திற்காகப் போட்டியிட்டனர். இறுதியில் அவுரங்கசீப் ஆட்சியுரிமைப் போட்டியில் வெற்றி பெற்றான். தனது தந்தையைச் சிறைப்படுத்தி ஆக்ராக் கோட்டையில் சிறையிட்டான். "முகலாய நாட்டின் செல்வத்தை தாஜ்மஹால் கட்டுவதிலும், தனக்கென கரும் சலவைக் கல் மாளிகை கட்டுவதற்கும் மன்னர் வீண்விரயம் செய்தார். ஆயிரக்கணக்கான உழைப்பாளிகளின் உழைப்பை இந்த ஆடம்பர மாளிகைக்காக அர்ப்பணித்தார்" என அவுரங்கசீப் குற்றம் சுமத்தினான். ஆக்ரா கோட்டைச் சிறையிலிருந்து தாஜ்மஹாலைப் பார்ப்பதற்கு வசதியாகச் சிறைச் சுவரில் ஒரு ஜன்னலை அவுரங்கசீப் அமைத்துக்கொடுத்தான். சார்ஜகானின் இறுதிக்காலம் இவ்வாறு கழிந்தது. 1666 ஜனவரியில் தான் கட்டிய நினைவு மாளிகையைப் பார்த்தவாறே சார்ஜகான் மரணமடைந்தான். அவன் விருப்பிற்கு மாறாக அந்த தாஜ்மஹாலிலேயே சமாதி வைக்கப்பட்டான்.

சார்ஜகான் தனது 74 வது வயதில் காலமானான். இறந்த பின்னரும் அவனது விழிகள் தாஜ்மஹாலைப் பார்த்தபடியே திறந்து கிடந்தன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக அதிசயங்கள்

உலக அதிசயங்கள் ஏழு என்பது யாவரும் அறிந்ததே. புராதனகாலத்தில் ஏழு அமைப்புக்களை அதிசயங்களாக விவரிக்கத் தொடங்கியது. கி.மு. 2 ஆம் நூற்றாண்டுகளினை அடுத்த அலெக்சாண்டிரியனின் காலத்தில் ஆகும். சிடோவின் ஆன்டி பட்டரே ஏழு அதிசயங்கள் குறித்த பட்டியலை உருவாக்கினார். புராதன ஏழு அதிசயங்கள் வருமாறு.

1) எகிப்திய பிரமிட்டுக்கள்
2) பாபிலோனிய தொங்கு தோட்டம்
3) ஜுப்பிட்டர் சிலை
4) டயானா கோயில்
5) மாசோலஸ் மன்னன் கல்லறை
6) ரோட்ஸ் பேருருவச் சிலை
7) அலெக்சாந்திரியா கலங்கரை விளக்கம்

## 1. எகிப்திய பிரமிட்டுக்கள்



எகிப்தில் நைல் நதியின் மேற்குக் கரையில் அமைந்தள்ளது. பரப்பு 12 ஏக்கர். கி.பி. 2690 இல்தான் இது கட்டப்பட்டது. இதற்குரிய இடத்தை ஒழுங்குபடுத்த மட்டுமே 10 வருடங்கள் ஆயின. ஒரு இலட்சம் பணியாளர்கள் 20 வருடங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து வேலை செய்து மன்னரின் கல்லறைப் பணியை (Tomb) முடித்தனர். இதன் உயரம் 481 அடி. மன்னரின் சடலம் கெட்டுப் போகாமலிருக்கபலவித தைலங்கள் சடலத்தில் பூசப்பட்டு, பிரமிட்டின் உள்ளே பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. இடிபாடுகள் ஏற்பட்ட போதிலும் இன்றும் நிலைத்து நிற்கின்றது.

2) **பாபிலோனியத் தொங்கு தோட்டம்:**

## The hanging garden of Babylon


கி.பி ஆறாம் நூற்றாண்டில் இரண்டாம் நெபுகத் நெஸர் என்ற மன்னரால் கட்டப்பட்டது. அக்காலத்தில் பாபிலோன் மிகப் பெரிய நகரமாக இருந்தது. அடுக்கடுக்கான மாடிகளில் உருவாக்கப்பட்டது தான் இந்தப் பூந்தோட்டம். உயரத்தில் உள்ள செடிகளை நனைப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டிருந்தது. இப் பொழுது முழுமையும் அழிந்து விட்டது. கூம்பு வடிவ ஐந்து மாடிகளைக் கொண்ட இந்த மாளிகையில் பூஞ்செடிகள் வளர்க்கப்பட்டன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. **யூப்பிட்டர் சிலை**



யூப்பிட்டர் என்ற கடவுளுக்காக கி.பி.463 இல் கிரேக்க சிற்பி பீடியாஸ் என்பவனால் 40 அடி உயரமான சிலை ஒன்று உருவாக்கப்பட்டது. பளிங்குக் கற்களால் செய்யப்பட்ட இச்சிலை தங்கத்தாலும் யானைத் தந்தங் களினாலும் அழகு செய்யப்பட்டது. கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட புவி நடுக்கத்தால் கீழே விழுந்ததையடுத்து இது கான்ஸ்டாண் டினோபிளுக்குக் கொண்டு செல்லப்பட்டது. காலச் சூழற்சியில் மண்ணோடு மண்ணாகியது.

4) **டயானா கோயில்**




துருக்கியில் கி.பி. 350 இல் டயானா என்னும் தேவதைக்குச் சலவைக் கல்லால் ஒரு தேவாலயம் கட்டப் பட்டது. இதனை எபிஸஸில் ஆர்டிமிஸ் தேவாலயம் எனவும் அழைத்தனர். சுமார் 342 அடி நீறமும், 164 அடி அகலமும் 60 அடி உயரமும் கொண்டதாக டயானா கோவில் விளங்கியது. பி.பி. 262 இல் அழிந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 5) மாசேலஸ் மன்னர் கல்லறை

சின்ன ஆசியாவில் ஆர்ட்டிமிசியா அரசி தனது கணவர் மாசோல்ஸ் மன்னனுக்காக ஒரு கல்லறை அமைத்தார். பளிங்காலான இக் கல்லறை 140 அடி உயரமானது. வட்டவடிவமுடையது. ஒரு பூகம்பத்தால் அழிந்து போனது. இதனை ஹாலிகர் நஸ்ஸார் கல்லறை எனவும் கூறுவர். இது கி.மு.352இல் கட்டப்பட்டது.



### 6) ரோட்ஸ் பேருருவச்சிலை

சூரியபகவான் ஹெலியோஸின் பித்தளைச் சிலை இதுவாகும். 105 அடி உயரமானது. கி.மு.280 இல் உருவாக்கப்பட்டது. சுமார் 13 வருடங்கள் இதன் வேலைகள் நடைபெற்றன. கி.மு.224 இல் ஒரு பூகம்பத்தால் இது மறைந்தது.

### 7. அலெக்சாந்திரியா கலங்கரை விளக்கம்

எகிப்தில் அலெக்சாந்திரியாத் துறைமுகத்தின் அருகில் ஃபரோஸ் தீவில் 2வத தொலமி மன்னால் கட்டப்பட்ட 200 அடி உயரமான கலங்கரை விளக்கம் ஒன்றிருந்தது. இது கி.மு.247க்கு முன்பு கட்டப்பட்டது இன்றில்லை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்தியகாலத்தின் ஏழு அதிசயங்கள்

1. ரோமிலிருந்த கொலோஸியம்
2. அலெக்சாந்திரியாவின் குகைகள்
3. சீனப் பெருஞ்சுவர்
4. கற்களால் ஆன வட்டங்கள்
5. போர்சீலியன் கோபுரம்
6. பைசா நகரக் கோபுரம்
7. கொன்சாந்திநோபிலுள்ள ஹசியா சோபியா

### 1. ரோமிலிருந்த கொலோஸியம்

உரோம மக்களின் குரூர விளையாட்டிற்காகக் கட்டப்பட்ட அரங்கு இதுவாகும். இதில் விலங்குகளும் அடிமைகளும் சாகும்வரை சண்டை பிடித்து மாண்டனர். அரசனும், மக்களும் வேடிக்கை பார்த்தனர். இது ஒரு பயிற்சிக்களமாகவும் விளங்கியது. இன்று இது சிதைந்து காணப்படுகின்றது.




### 2. அலெக்சாந்திரியாவின் குகைகள்

லிபியன் பாலைவனத்தின் முடிவில் அமைந்திருந்தது. முன்பு கிறிஸ்தவ அகதிகள் இந்தப் பாதையை உபயோகித்து வந்தனர். தற்போது இது முழுமையாக அழிந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. **சீனப்பெருஞ்சுவர்**



கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் இதன் வேலைகள் ஆரம்பமாயின. இதன் கட்டுமானப் பணிகள் மிக நீண்ட காலம் நடைபெற்றது. (கி.பி.14 ஆம் நூற்றாண்டு வரை) இது வடக்கு சீனாவில் சுமார் 1500 மைல் வரை நீண்டு கிடக்கிறது. தற்போது இதைப் பழுது பார்க்க பல நாடுகளில் உதவி கோரப்பட்டுள்ளது.

4. **கற்களால் ஆன வட்டங்கள்**

நியோலிதிக் காலத்தில் இங்கிலாந்தில் சாலீஸ்பரி சமவெளியில் சூரிய பகவானை வழிபடுவதற்காக கட்டப்பட்டதாகக் கருதப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டில் இதன் சரித்திரம் நிர்ணயிக்கப்பட்டபோது மத்திய காலத்தில் அதிசயங்கள் பட்டியலிலிருந்து இது நீக்கப்பட்டது.

5. **போர்சீலியன் கோபுரம்**

சீனாவில் நான்சிங் என்ற இடத்தில் 260 அடி உயரமான ஒரு கோபுரம் இருந்தது அதனைப் போர்சீலியன் கோபுரம் என்பர். இது 1853 இல் தெய்விங்க் புரட்சியாளர்களால் அழிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### 6. பைசா நகரக் கோபுரம்

இத்தாலியில் பைசா நகரத்தில் ஒரு கோபுரம் உள்ளது. இது கி.பி. 1174 இல் கட்டத் தொடங்கப்பட்டது. 1350 இல் கட்டி முடிக்கப்பட்டது. எட்டு அடுக்குகளைக் கொண்ட 176 அடி உயரமான பைசாக் கோபுரத்தின் சிறப்பு யாதெனில் அது இருப்பிலிருந்து சுமார் 16 அடி சரிந்து நிற்பதாகும்.

### 7. ஹாசியா சோபியா

துருக்கியின் கொன்சாந்திநோபிளிலுள்ள ஒரு மாளிகை இது. ஜஸ்டினியன் சக்கரவர்த்தியால் அமைக்கப்பட்டது. கி.பி.537 - 54 இல் அமைக்கப்பட்டது. துருக்கிய சுல்தான் இரண்டாம் முகம்மது கான்ஸ்டாண்டிநோபிளை கைவசப்படுத்தி இதை ஒரு முஸ்லிம் பள்ளியாக மாற்றினார். தற்பொழுது இது ஓர் கலை அருங்காட்சியமாக உள்ளது.

## தற்காலத்தின் ஏழு உலக அதிசயங்கள்

நவீன உலகில் பின்வருவன ஏழு உலக அதிசயங்களாக கருதப்படுகின்றன.


1. எகிப்திய பிரமிட்டுகள்
2. ஹாசியா சோபியா
3. பைசா நகரக் கோபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தாஜ்மகால்
5. வாஷிங்டன் நினைவு மண்டபம்
6. ஈபிள் கோபுரம்
7. எம்பயர் ஸ்ரேட் கட்டிடம்

## 4. தாஜ்மகால்



இந்தியாவில் ஆக்ரா நகரத்திலுள்ள பளிங்கு மாளிகை. ஷாஜகான் சக்கர வர்த்தி தன்னுடைய மனைவி மும்தாஜின் நினைவாக எழுப்பிய கல்லறை. 1648 இல் கட்டப்பட்டது.



## 5. வாஷிங்டன் நினைவு மண்டபம்

1885 இல் முன்னாள் அமெரிக்க அதிபரின் நினைவிற்காகக் கட்டப்பட்டது. 555 அடி 5 அங்குல உயரம் கொண்டது.

## 6. ஈபிள் கோபுரம்

1847 - 1889 இல் கட்டப்பட்டது. 948 அடி உயரமுடையது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. எம்பயர் ஸ்டேட் பில்டிங்ஸ் (நியூயோர்க்)

1931 இல் கட்டப்பட்டது. இதன் உயரம் 1477 அடி, 1951 இல் 222 அடி உயரமுள்ள ஒரு தொலைக்காட்சி கோபுரமும் இத்துடன் இணைத்து நிறுவப்பட்டுள்ளது.



உலக அதிசயங்களைத் தேர்ந்தெடுப்பதில் அங்கீகரிக்கப்பட்ட அளவுகோல்கள் எதுவும் இல்லை. காலம் காலமாக ஏதாவது ஒரு காரணம் பற்றி வழங்கப்பட்டன. இன்றும் இந்த நிலையே தொடர்கிறது.

### இலங்கையின் முதலிடங்கள்

- முதல் பிரதமர் டி.எஸ். சேனநாயக்க
- முதலாவது ஆளுனர் பிரெட்றிக் நோத் (1798 -1805)
- முதல் ஜனாதிபதி வில்லியம் கோபல்லாவ
- முதல் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஜே..ஆர்.ஜெயவர்த்தனா
- தேசாதிபதியாக கடமை புரிந்த முதல் இலங்கையர் சேர் ஒலிவர் குணதிலக
- முதல் செய்தித்தாள் கொழும்பு ஜேணல்
- முதல் தமிழ் செய்தித்தாள் உதயதாரகை(1841இல்)
- முதல் பெண்கள் பாடசாலை உடுவில் மகளிர் கல்லூரி(1824)
- முதல் அரசியல் கட்சி இலங்கை தேசியகாங்கிரஸ். இதன் முதல் தலைவர்
  சேர் பொன்னம்பலம் அருணாசலம் ஆவார்.
- முதல் தபால் முத்திரை 1857ல் வெளியிடப்பட்டது. இதில் விக்ரோரியா மகாராணியின் படம் பொறிக்கப்பட்டு இருந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலிகள்

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மக்கள் வங்கி பல்கலைக்கழக கிளை முகாமையாளர்
**திருமதி பத்மலோஜினி ரகு** அவர்களின் அன்புத் தாயாரும்,
மக்கள் வங்கி சாவகச்சேரி கிளை எமது முகாமையாளர்
**திரு.துரைசிங்கம் ரகு** அவர்களின் அருமை மாமியாருமாகிய
**திருமதி மணி சிவசுப்பிரமணியம்**
அவர்கள் காலமானதையிட்டு துயரடைந்துள்ள அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஊழியர்கள்,
(2613) **மக்கள் வங்கி, சாவகச்சேரி கிளை.**

## கண்ணீர் மாலையாக்கி வணங்குகின்றோம்

**திருமதி மணி சிவசுப்பிரமணியம்**

கோடை வெய்யிலில் கொடுமையும் விஞ்சி
மணி அம்மா மலர்
வாடி வீழ்ந்த செய்தி துயர் பிழியும்
அம்மா... அம்மா... என்று கதறும்
எங்கள் வங்கி முகாமையாளர் லோஜி அம்மா குடும்பத்திற்கு
எப்படி ஆறுதல் கூறுவோம்?
கண்ணீரை மாலையாக்கி வணங்குகின்றோம்!
சாந்தி பெறுக. எங்களுக்கும் சாந்தி தருக.

மக்கள் வங்கி,
(2606) யாழ்.பல்கலைக்கழக கிளை குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மக்கள் வங்கி, பல்கலைக்கழகக் கிளை முகாமையாளர்
திருமதி பத்மலோஜினி ரகு
அவர்களின் அன்புத் தாயாரும்,
மக்கள் வங்கி, சாவகச்சேரி கிளை முகாமையாளர்
திரு.துரைசிங்கம் ரகு
அவர்களின் அருமை மாமியாருமாகிய
**திருமதி மணி சிவசுப்பிரமணியம்**
அவர்கள் காலமானதையிட்டு துயரடைந்துள்ள அன்னாரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வசந்த பவனம், யாழ்ப்பாணம் (2655) பா.லிங்கநாதன்.

## அன்னைக்கு எம் அஞ்சலி

எங்கள் சமூகப்பணிகளில் தோள்தரும் மக்கள் வங்கி பல்கலைக்கழகக் கிளை முகாமையாளர் **திருமதி பத்மலோஜினி ரகுவின்** அன்புத் தாயார் **திருமதி மணி சிவசுப்பிரமணியம்** அவர்களின் மறைவுப் பிரிவுத்துயரில் குடும்ப அங்கத்தினருடன் நாங்களும் இணைகின்றோம்.

(2627) **- சமூகவியல் சமூகம், யாழ்.பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி அம்மா ... !

# கண்ணீர் மாலையாக்கி வணங்குகின்றோம்



தோற்றம் : 25.10.1921

மறைவு : 03.04.2002

கோடைவெய்யினில் கொடுமைமையாம் வீஞ்சி
அன்னை மலர்
வாடி விழுந்த செய்தி அகமெலாம் சுடும்

தளரா மனதின் எங்கள் தலைவி,
'அம்மா, அம்மா' என்று கதறுதலைத் தாங்காது
எங்களது இதயங்கள் துயர் பிழியும்

திருமதி. மணி சிவசுப்பிரமணியம் அமரரானார்
அர்த்தங்கள் நிறைந்த மணி அம்மா வாழ்வு
என்றும் மறைவதில்லை
ரஞ்சிதலோஜினி (லண்டன்), பத்மலோஜினி (எங்கள் முகாமையாளர்)
ரவீந்திரன் (அவுஸ்திரேலியா) எனும்
முத்தான மூன்று செல்வங்கள் வழிவழி
என்றும் நிலை பெறுவார்

அன்னையே !
எங்கள் கண்ணீரை மாலையாக்கி
வணங்குகின்றோம்
சாந்தி பெறுக.
எங்களுக்கும் சாந்தி தருக.

மக்கள் வங்கி, யாழ். பல்கலைக்கழக கிளை
குடும்பத்தினர்

கலைமகள் அச்சகம், யாழ். பல்கலைக்கழகம் முன்பாக, திருநெல்வேலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் மணி சிவசுப்பிரமணியம்

தோற்றம்

1921

✳

10

✳

25



மறைவு

2002

✳

04

✳

03

எமது முகாமையாளர் திரு. துரைசிங்கம் ரகு அவர்களின் மாமியாரும்,
மக்கள் வங்கி யா/ பல்கலைக்கழக கிளை முகாமையாளர்
**திருமதி. பத்மலோஜினி** அவர்களின் தாயாருமாகிய

## திருமதி. மணி சிவசுப்பிரமணியம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர்க்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்கள். அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

**ஊழியர்கள்**
**மக்கள் வங்கி**
**சாவகச்சேரி கிளை**

குமரன் அச்சகம், கொம்பியூட்டர் ஓவ்(f)செற் பிறின்ட், 138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை



யாழ் பல்கலைக்கழக மக்கள் வங்கி கிளையின் முகாமையாளர்
திருமதி. பத்மலோஜனி ரகுவின் அன்புத் தாயாரும் சாவகச்சேரி
மக்கள் வங்கி கிளையின் முகாமையாளர் திரு. ரகுவின் மாமியாருமான

## திருமதி. மணி. சிவசுப்பிரமணியம்

காலமானதையிட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த மனவேதனையும் அடைகின்றோம்.

அன்னாரின் மறைவிற்காக இறைவனை பிரார்த்திப்பதோடு, அவரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**மில்லேனியம் றெஸ்ரோரன்ஸ்**
**உரிமையாளரும், ஊழியர்களும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்திரி மந்திரம்

**ஓம்**
**பூர் புவஸ் ஸுவ:**
**தத் ஸவிதுர் வரேண்யம்**
**பர்கோ தேவஸ்ய தீமஹி/**
**தியோ யோ ந: ப்ரசோதயாத்//**

*ஓம் சாந்தி சாந்தி சாந்தி*

யார் நம் அறிவைத் தூண்டுகிறாரோ அந்தச் சுடர்க் கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போமாக.

ஓம் - ஓம், பூ - பூலோகம், புவ- புவர்லோகம், ஸுவ - ஸுவர் லோகம், ய - யார், ந - நம்முடைய, திய - அறிவை, ப்ரசோதயாத் - தூண்டுகிறாரோ, தத் - அந்த, தேவஸ்ய - சுடருடைய, ஸவிது - கடவுளின், வரேண்யம் - மேலான, பர்க - ஒளியை, தீமஹி - தியானிப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னாரின் இளமைத்தோற்றம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது தாயாரின் இறைபதம் அடைந்த செய்திதனைச் செவியுற்று, அவரது இறுதிக் கிரியைகளிலும், இறுதியாத்திரையிலும் பங்கு கொண்டு பல வழிகளிலும் பேருதவி புரிந்தோர்க்கும், நேரில் வருகை தந்து எமது துயரினில் பங்கு கொண்டு ஆறுதல் கூறியோருக்கும், இன்று நடைபெற்ற கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் பங்கு பற்றியோருக்கும், தொலைபேசி, தொலைநகல், ஈமெயில், இணையம், மடல்கள் ஆகியன மூலம் அனுதாபம் தெரிவித்த அன்பர்கள் அனைவருக்கும் எமது இதயங்கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

நன்றி

பிள்ளைகள்.

# Thank You

We express our Sincere gratitude and say a big "Thank You" to all our friends and relations in Sri Lanka and abroad and our neighbours here, for attending the funeral, sending floraltributes and message of condolence for helping in numerous ways and also sharing our grief and sorrow.

**Children.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குலமுறை கிளத்தல்

அமரத்துவ தம்பதிகள் — நவரட்ணம் + அன்னம்மா

அமரத்துவ தம்பதிகள் — சிவசுப்பிரமணியம் + நாகரட்ணம்

அமரர் சிவசுப்பிரமணியம் + **அமரர் மணி**

- ரஞ்சிதலோஜினி + சிவசுந்தரம்
  - மீரா
  - ஜெகான்
- பத்மலோஜினி + ரகு
  - டினேஸ்
  - பிருந்தா
- ரவீந்திரன் + ராணி
  - பிரசாந்த்
  - சாருணி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக்கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ அது நாளை
மற்றொருவருடையதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்.

– பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரிஹரனன் பிறிண்டேர்ஸ் (தனியார்) நிறுவனம்,
424, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொ.இல - 021-2717

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org